# தமிழ்ப் புலவர் பெருமக்கள்

## III

விந்திய வெளியீடுகள்

கோதண்டராம்

# தமிழ்ப் புலவர் பெருமக்கள்

## III

Recd 28/1/-1

ஆசிரியர் :

**புலவர் பு. செல்வராசன்,**

தலைமைத் தமிழாசிரியர்,

C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

விந்தியா பப்ளிகேஷன்ஸ்

வேப்பேரி : : சென்னை

முதற் பதிப்பு—அக்டோபர் 1950

காபிரைட்

விலை அணு 12

Kabeer Printing Works, Madras-5

# முகவுரை

தமிழ்ப் புலவர் பெருமக்கள் என்னும் பெயருடன் வெளிவரும் இத் துணைப்பாட நூல்வரிசை முதல் மூன்று படிவங்கட்கு (Forms) உரியது. அவ்வரிசையில் மூன்றும் நூலாக வெளிவரும் இதன்கண் - மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், அவருடைய முதல் மாணவரான வித்துவான் தியாகராச செட்டியார் என்னும் இருவர் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர் பெருமக்கள் வரலாறுகளிலிருந்து—அக்காலப் புலவர்கள் பாடம் படித்த முறை, பாடஞ்சொன்ன முறை, வருவாய் பெற்ற முறை, வாழ்க்கை நடத்திய முறை, அவர்களுடைய பெரும்புலமை, நல்லொழுக்கம், அவர்களை ஆதரித்த பெருமக்களைப் பற்றிய செய்திகள் முதலியவற்றை இக்காலத்தார் நன்கறியலாம். பத்தாயிரம் பாக்களுக்கு மேலாக - கம்பருக்கும் மேலாகக் கவிகள் பாடிய பிள்ளையவர்கள் வரலாறு தமிழ் மாணவர் படித்துணரத் தக்கதாகும்.

இப்பெருமக்கள் வரலாறுகளைத் தமிழர்க்குத் தம் நூல்கள் வாயிலாக உணர்த்திய பெருமை பிள்ளையவர்கள் மாணவரான டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கட்கே உரியது. அவர்க்குத் தமிழர் என்றும் கடமைப்பட்டவராவர். அப் பெரியார் வரைந்த நூல்கள் இச்சிறு நூல் வரைதற்குப் பெரிதும் துணை செய்தன.

ஆசிரியன்

# பொருளடக்கம்



| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## I. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | ... | 1 |
| 2. | திருமண வாழ்க்கை | ... | 10 |
| 3. | திருவாவடுதுறை ஆதீன வித்துவான் | | 21 |
| 4. | இறுதிக் காலம் | ... | 32 |
| 5. | குணநலன்கள் | ... | 44 |

## II. வித்துவான் தியாகராச செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| 1. | இளமைப் பருவம் | ... | 51 |
| 2. | கல்லூரிப் பேராசிரியர் | ... | 60 |
| 3. | கல்லூரியிலும் மடத்திலும் கல்விப்பணி | | 69 |
| 4. | இறுதி நிலை | ... | 77 |
| 5. | குணநலன்கள் | ... | 84 |



மகாவித்துவான்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

# தமிழ்ப் புலவர் பெருமக்கள்

## I. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

### 1. இளமைப் பருவம்

**மயிலாடுதுறையில் நடந்த நிகழ்ச்சி**

காலை நேரம்; வீட்டு அறை ஒன்றில் இருந்த சாய்வு நாற்காலியில் அறிஞரென மதிக்கத் தகும் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரெதிரில் ஏடும் கையுமாக மற்றொருவர் இருந்தார். மற்றும் சிலர் மூலைக்கு மூலையாக உட்கார்ந்து, ஏதோ ஒன்றினுக்காகக் காத்திருப்பவர் போன்ற முகத்தோற்றத்துடன் காணப்பட்டனர். ஒருவர் உரைநடை ஒன்றினைப் படித்துக் காட்டினார். சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தவர் அதனைக் கூர்ந்து கேட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தார். அந்த அறையில் மூச்சு விடும் ஒலிகூட உரத்துக் கேட்காதபடி அமைதி நிலவியிருந்தது.

சற்று நேரம் இவ்வாறாகக் கழிந்த பிறகு, சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தவர், உறக்கத்தினின்று திடுக்கிட்டு உணர்ச்சி பெற்றவர் போன்று நிமிர்ந்து உட்கார்ந்தார்; எதிரில் ஏடும் கையுமாக இருந்தவரும் திடுக்கென விரைந்தவர் போன்று தம் கையிலிருந்த

எழுத்தாணியை ஏட்டில் பதித்து எதிரிலிருந்தவர் வாயைப் பார்த்தார். அதே போன்று அறையிலிருந்த அத்துணைப்பேரும் உறக்கத்தினின்று எழுந்தவர் போன்று ஒரு விழிப்பு நிலையைப் பெற்றனர்.

அறிஞர் வாயிலிருந்து பாடல்கள் பல வெளி வந்தன. ஏடெழுதினவர் விரைவாக அப்பாடல்களைப் பனையேட்டில் பதியவைத்துக்கொண்டிருந்தார். சுற் றிலும் அமர்ந்து கேட்டவர்கள் அது திருநாகைக் காரோணப் புராணத்தில் சுந்தரவிடங்கப் படலம் என்பதை அறிந்தனர்; அது கற்பனை நிறைந்த பகுதியாதலின், சுவை நிரம்பியதாயிருக்கும் எனச் செவிகளைக் கூர்மையாக்கிக் கேட்டுக்கொண்டிருந் தனர்.

செய்யுள் இயற்றும் அறிஞரின் வாய் ஓயவில்லை. அவர் சிறிதும் இடையில் நிறுத்தாமல், சிந்தனை செய்யவும் ஒய்வு தேவைப்படாமல் பாடல்களைச் சொல் லிக் கொண்டே போனர். ஏடெழுதுபவரும் சலிக்கா மல், இடையில் கைஓய்வு கருதியும் நிறுத்தாமல், பாடல் கூறும் விரைவுக்கேற்றவாறு எழுதிக்கொண்டே போனர்.

காலை ஏழு மணிக்குத் துவக்கிய இந்தக் காட்சி பத்து மணி ஆகியும் முடிவு பெறவில்லை. பாடல் கூறுபவர், எழுதுபவர், கேட்போர் அனைவரும் ஒரே நிலையில் இருந்தனர். இடையில் ஒருவர் வந்து, குளிக்க நேரமாகிவிட்டது என்று கூறிப்போனர்; பின்னொருவர் வந்து உணவுக்கு நேரமாகிறதென்று கூறிவிட்டு நகர்ந்தார். ஆனல் பகல் பன்னிரண்டு மணிவரை நிலைமை மாறவில்லை.

சரியாக மணி பன்னிரண்டடித்தது. ஏடெழுதியவர் திடீரென எழுந்து கையிலிருந்த ஏடுகளைக் கட்டி, எழுத்தாணியை உறையிற் போட்டு, எல்லாவற்றையும் எதிரில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த அறிஞரின் காலடியில் வைத்து, அவர் கால்களில் விழுந்து வணங்கி, எழாமல் அப்படியே குப்புறப் படுத்துக்கிடந்தார்.

இதைக்கண்ட அறிஞர், "தம்பி, என்ன அப்பா! ஏன் இப்படி? எழுந்திரு! என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

ஏடு: ஐயா, இனி என்னால் எழுதவேமுடியாது. என்னைப்போல் எழுதுகிறவர்கள் எவருமில்லை என்று இறுமாந்தேன். அவ்விறுமாப்பு இன்றுடன் அகன்றது. இதோ, பாருங்கள்: வலக்கைச் சுண்டு விரலின் பின்னாலும் இடக்கைக் கட்டை விரலின் முனையிலும் குருதி குழம்பிவிட்டது. தங்களைப் போன்று விரைந்து பாடல் சொல்லும் ஆற்றல் உடையவர் எவரையும் நான் இதுவரையிற் கண்டதில்லை. இன்றைக்கு நடந்த கற்பனைப் பகுதி மற்றைப் புலவர்கள் செய்வதாயின் பலநாட்கள் ஆகியிருக்கும். தங்களுக்கோ எவ்விதத் தடங்கலுமின்றிச் சரமாரியாக வந்ததே! மீண்டும் இப்பணிக்கு நான் வரப் பல நாட்கள் ஆகுமெனத் தெரிவதால், இடையில் நான் நிறுத்த நேரிட்டதற்கு மன்னிக்கவேண்டுகிறேன்.

அறி: உனக்குச் சங்கடமாயிருக்கிற தென்பதை முன்னரே கூறியிருந்தால் நான் நிறுத்தியிருப்பேனே! இது சிறந்த பகுதியாதலின் இடையில் நிறுத்த மனமின்றித் தொடர்ந்து சொல்லிவந்தேன். நீ போய்வா.

இந்நிகழ்ச்சி நடைபெற்றது மயிலாடுதுறையில் (மாயூரம்) ஆகும். சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த அறிஞர் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.** ஏடெழுதியவர், முத்தாம்பாள்புரம் (ஒரத்தநாடு) நாராயணசாமி கவி என்பவரின் மாணவராயிருந்து, பிறகு பிள்ளையவர்களின் மாணவராக வந்து சேர்ந்த **கோபாலப் பிள்ளை** என்பவராவார்.

## நிகழ்ச்சிக்குக் காரணம்

இந்தக் கோபாலப் பிள்ளை என்பவர் பனை ஏட்டில் தம்மைப் போன்று விரைந்தெழுதும் ஆற்றல் பிறர் எவருக்குமில்லை என்னும் செருக்கடைந்திருந்தார். இவர் நண்பர் ஒருவர், ஒருநாள் இவரைப் பார்க்க வந்தபோது, இவர் எழுதுந்திறமை குறித்துப் புகழ்ந்தார். அப்புகழ்ச்சியில் இறுமாப்படைந்த இவர், “நான் எழுதுவது இருக்கட்டும். ஐயா அவர்கள் (பிள்ளையவர்கள்) என் கைவலிக்குமாறு செய்யுள் செய்கிறார்களில்லையே!” என்று கூறித் தம் பெருமையை விரித்தார்.

அவ்வமயம் உள்ளே படுத்திருந்த பிள்ளையவர்கள் காதில் இது விழுந்தது. அப்போதே எழுந்து வருவது நல்லதன்று எனக்கருதிய பிள்ளையவர்கள், இந்நிகழ்ச்சிக்குப் பின் இரண்டொரு நாட்கள் வழக்கம்போல் பாடல்களைச் சொல்லிவிட்டுப் பிறகு ஒரு நாள் மேற்கண்டவாறு கோபாலப் பிள்ளை செருக்கடங்குமாறு செய்தார்.

## பிள்ளையவர்கள் பிறப்பு

மதுரையில் பரம்பரையாகத் தமிழ்ப் புலமை பெற்றிருந்த பழங்குடி ஒன்றில் தோன்றிய **சிதம்பரம் பிள்ளை, அன்னத்தாச்சி** என்பவர்களின் மைந்தராய்ப் பிறந்தவர் பிள்ளையவர்கள். சிதம்பரம் பிள்ளை நல்ல தமிழ்ப்புலமை வாய்ந்தவர்; தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பழுதற ஓதிப் பாவியற்றும் வன்மை பெற்றவர். இவர் அன்னத்தாச்சி அவர்களை மணந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வருகையில், மதுரையில் இருக்க மனமின்றித் திரிசிரபுரத்திற்கு மேற்கே காவிரியின் தென்பாலுள்ள எண்ணெய்க் கிராமம் சென்றார்; சிறிதுகாலம் தங்கிப் பின் அங்கிருந்து அதவத்தூர் சென்று, அங்கே ஒரு பள்ளிக்கூடம் வைத்துக் கணக்காயராக இருந்து, மக்களுக்குத் தமிழறிவு ஊட்டும் பணியை மேற்கொண்டார்.

அதவத்தூரிலே சிதம்பரம் பிள்ளை நிலைத்துத் தங்கிவிட்டாரெனினும் அடிக்கடி மதுரை சென்று இறைவனை வணங்கிவருதலை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருந்த சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு 1815 - ஆம் ஆண்டு, ஏப்ரில் திங்கள் ஆறும் நாள் வியாழனன்று ஓர் ஆண் மகவு பிறந்தது. இவ்வாண் மகவே, பிற்காலத்திற் புகழிற் சிறந்து விளங்கிய **மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை** ஆகும். இவருக்குப் பின், **சொக்கலிங்கம்** என்னும் ஆண்மகவொன்றும், **மீனாட்சி** எனும் பெண்மகவொன்றும் சிதம்பரம் பிள்ளையவர்களுக்குப் பிறந்தன.

**கல்விப் பயிற்சி**

மூத்த புதல்வருக்கு ஐந்து வயது ஆனவுடன் சிதம்பரம் பிள்ளை, தம் பள்ளிக்கூடத்திலேயே வைத்துக் கல்வி கற்பிக்கத் தொடங்கினர்; தந்தையார் புலவராதலால் மைந்தருக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் குறைவறக் கற்பித்த துடன், செய்யுளியற்றும் பயிற்சியையும் அளித்தார்.

மீனாட்சிசுந்தரனார் இளமை முதலே நினை வாற்றல் மிக்கவராயிருந்தார். செய்யுட்களின் கருத் துக்களைக் கூர்ந்து ஆராய்தல், கற்ற செய்யுட்களை நினைவிலிருத்தல் முதலியவை அவ்விளம் பருவத்தி லேயே அவருக்கு எளிதாயிருந்தன. சிதம்பரம் பிள்ளை தம் புதல்வரின் அறிவு வளர்ச்சியை யும் ஆற்றலையும் நன்கறிந்து, பிரபந்தங்கள், மாலைகள், நிகண்டுகள், நன்னூல் மூலம் முதலிய வற்றை வீட்டில் வைத்து மனப்பாடம் செய்யுமாறு பணித்தார்; ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் இலக்கண பாடம் கற்பித்து, ஐயந்திரிபுகளைப் போக் கினர். இவை தவிர, பொதுவாகப் பள்ளியில் கற்பிக் கும் நைடதம் போன்ற நூல்களையும் பிள்ளையவர் கள் பாடம் கேட்டார்.

அக்காலத்தில் அச்சுச் சுவடிகள் பெரும்பாலும் வெளிவராமையால், படிப்பவர்கள் ஆசிரியர்கள் மாட்டுள்ள நூல்களைப் பனை ஏட்டில் பிரதி எடுத்துப் படிப்பதே வழக்கமாயிருந்தது. எனவே, சிதம்பரம் பிள்ளை தம் மைந்தருக்குப் பனை ஏட்டில் விரைவாக எழுதும் பயிற்சியையும் அளித்தார்.

சிதம்பரம் பிள்ளை விரைந்து செய்யுளியற்றும் வன்மையுடையவராதலின், தம் மைந்தரையும் அத் துறையில் நன்றாகப் பழக்கிவிட்டார். திரிபு, யமகம், சிலேடைகளை வைத்துப் பாடச் செய்வதும் ஆசு கவிகள் பாடச் செய்வதுமாகச் சிதம்பரம் பிள்ளை தம் மைந்தரை இளம் வயதிலேயே சிறந்த புலவராக்கி விட்டார்.

## செய்யுள் இயற்றல்

செய்யுள் பாடும் ஆற்றல் கைவரப்பெற்ற மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், நாள்தோறும் தமக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம் ஏதேனும் ஒரு பொருளை வைத்துச் செய்யுள் இயற்றுவதைத் தம் வழக்க மாகக் கொண்டார். மேலும் அவர், புதிய செய்யுள் கள் இயற்றும் வன்மை வாய்ந்த சிலர் உறையூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் இருப்பதறிந்து, அவர்களு டன் நட்புப் பூண்டு பழகிவந்தது, அவருடைய செய்யு ளியற்றும் திறனை மிகுக்கச் செய்தது என்னலாம்.

## வள்ளல்கள் அறிமுகம்

“ தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் ”

என்றதற்கு ஏற்ப, சிதம்பரம் பிள்ளை தம்மை அழைத்த செல்வர்கள் வீட்டுக்கெல்லாம் தம் மைந் தரையும் உடனழைத்துச் சென்று, தம் மைந்தரைக் கொண்டே பல பழைய பாடல்களுக்கு உரை கூறு மாறு செய்து, தம் மைந்தரின் புலமைக்குச் செல்வர் களின் பாராட்டுதலும் ஆதரவும் உண்டாகுமாறு செய்துவைத்தார். இதனால் பிள்ளையவர்களுக்கு

மேலும் மேலும் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்னும் ஊக்கம் தோன்றியது.

## யாண்டும் தமிழ் மணம்

விடுமுறை நாட்களில் சிதம்பரம் பிள்ளையவர்கள் தம் மைந்தரையும் தம்மிடம் பாடம் கேட்கும் மாணவர் சிலரையும் சேர்த்து, வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிவருமாறு திரிசிரபுரத்திற்கு அனுப்பிவைப்பது வழக்கம். வழியில் மனப்பாடம் செய்த செய்யுட்களைச் சொல்லிக்கொண்டும், பாடம்பற்றிய விளக்கங்கள் குறித்து இம்மாணவர்கள் பேசிக்கொண்டும் செல்வதுண்டு. இவர்கள் போகும் வழியில் சுங்கம் வாங்கும் பதவி வகித்துவந்த ஒருவர், தமிழ் ஆர்வம் மிக்கவராயும் சிதம்பரம் பிள்ளையவர்கள்பால் பேரன்பு உடையவராயும் இருந்தார். அவர் இந்த மாணவர்களை நிறுத்தி, சிதம்பரம் பிள்ளையவர்கள் சொல்லிக் கொடுத்திருந்த பாடல்களுள் சிலவற்றைப் பொருளுடன் கேட்டு மகிழ்வதுண்டு; சுயமே பாடல்களைப் புனையுமாறு கேட்டு இம்மாணவர்களின் திறத்தினைப் பரிசோதிப்பதும் உண்டு. இத்தகைய வாய்ப்புக்கள் கிடைத்தபோதெல்லாம் மீனாட்சிசுந்தரனார் பிற மாணவர்களினும் முன்னவராக முன்னணியில் நின்று, கேட்பவர் மகிழுமாறு பொருள் கூறினார்; புதிய செய்யுட்களை அவ்விடத்தே புனைந்துரைத்தார்.

## ஒரு வண்டி நெல் - பரிசு

ஒரு முறை மீனாட்சிசுந்தரனாரை நண்பர் ஒருவர் குறுநிலக் கிழார் ஒருவரிடம் அழைத்துச்

சென்றார். அங்கிருந்தவர்களுள் பிள்ளையவர்களின் திறனைக் காண விரும்பிய ஒருவர், ஒரு பாட்டைக் கூறி அதன் பொருளைக் கூறுமாறு கேட்க, பிள்ளையவர்கள் கேட்போர் எவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் அச்செய்யுளை விரித்துப் பொருள் கூறினார். பிறகு அவர், ' இப்பாட்டுக்கு அருத்தஞ் சொல் ' என்பதை ஈற்றடியாக வைத்து ஒரு வெண்பாப் பாடுமாறு கேட்டார். ' சொல் ' என்பதற்கு ' நெல் ' என்று பொருளிருக்கிறபடியால், நெல்லுக்கும் மும்மூர்த்தி களுக்கும் சிலேடையாகப் பொருள் வருமாறு பிள்ளை யவர்கள் ஒரு வெண்பாப் பாடினார். இதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த அக்குறுநிலக் கிழார், ஒரு வண்டி நெல் கொடுத்துதவினார். இவ்வாறு பிள்ளையவர்கள் இளமையிலேயே பல செல்வர்கள் மனத்தைத் தம் கல்வித்திறனால் மகிழவைத்துப் பெற்ற பரிசுகள் பலவாகும்.

## தந்தையார் மறைவு

சிதம்பரம் பிள்ளையவர்கள், ஒரு நாள் உடல் நலமற்றுப் படுத்துப் பின்னர் உயிர் நீத்தார். தந்தை யாரது பிரிவைக் கேட்ட பதினைந்தே வயதடைந் திருந்த மீனாட்சிசுந்தரனார் ஆறாத் துயரத்திலாழ்ந் தார்; பின்னர்ச் சான்றோர்களால் ஆற்றுவிக்கப் பெற்று, ஒருவாறு மன ஆறுதல் அடைந்தார்.

## 2. திருமண வாழ்க்கை

### திரிசிரபுரத்தில் குடியேற்றம்

தந்தையார் காலஞ்சென்ற பிறகு, பிள்ளையவர்களே தம் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தந்தையார் இருந்தபோதே அவருக்கு உதவி செய்து வந்தவர்கள், இப்போது, மேலும் பல உதவிகளைச் செய்தார்கள். அப்பெரியோர்களே அவருக்குக் காவேரியாச்சி என்னும் நங்கையாரைத் திருமணம் செய்துவைத்தார்கள். சோமரசம்பேட்டையில் மேலும் படித்தற்குத் தக்க நூல்களும் ஆசிரியர்களும் இல்லாமையின், பிள்ளையவர்கள் திரிசிரபுரம் செல்வதென்று முடிவு செய்தார்; அம்முடிபிற்கேற்ப, திரிசிரபுர மலைக் கோட்டையை அடுத்துள்ள ஓரிடத்தில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு அமர்த்திக் குடிபுகுந்தார்.

அவர் அத்தொல்பதியிலிருந்த புலவர் சிலரை அணுகிப் புதிய நூல்களைப் பாடங்கேட்டுவந்தார்; அதே காலத்தில் தாம் படித்த நூல்களைப் பிறருக்குப் பாடஞ் சொல்லியும் வந்தார். அங்கிருந்த காலத்தில் பிள்ளையவர்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் சித்திர கவிகளின் இலக்கணத்தையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார்.

### முதலில் இயற்றிய நூல்கள்

பிள்ளையவர்கள் தமிழில் தக்கவாறு தேர்ச்சியடைந்த பிறகு, சிவத்தலங்கள் பலவற்றுக்குச் சென்று சிவதரிசனம் செய்துவந்தார். அவ்வாறு தல

யாத்திரை செய்யுங்கால், திட்டகுடியில் இருந்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவ்வூர்க்கோவிலில் உள்ள சிவபிரான்மீது பதிகம் பாடி அளித்தார்; திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதியும், மயிலிராவணன் கதையும் பாடினார். இவை அவருடைய துவக்க நூல்களாகும்.

## ஆதீனத்திற் படிக்க ஆவல்

பிள்ளையவர்கள் சைவத்தில் பெரும் பற்றுக் கொண்டவராதலின், சிவதீட்சை பெற்று, நாடோறும் தவறாமல் சிவபூசை செய்துவந்தார்; சைவ நூல்களைப் படிக்கவேண்டுமென்னும் அவாக் கொண்டார்; திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவான் கச்சியப்ப முனிவர் செய்த நூல்கள் சிலவற்றைப் படித்தபின், அவ்வாதீனத்திற்குச் செல்லுதல் வேண்டும் என்னும் விருப்பங்கொண்டார்.

## வழி நெடுகத் தமிழ்க் கவிகள்

திருவாவடுதுறைக்குப் புறப்பட்ட பிள்ளையவர்கள் வழியிலிருக்கும் தலங்களையும், அத்தலங்களிலுள்ள புலவர்களையும் தரிசித்துக்கொண்டே சென்றார். பட்டீச்சுரத்தில் பசுபதிபண்டாரம் என்ற புலவர் இருந்தார். அவர் ஒரு செய்யுளைக் கூறிப் பொருள் தருமாறு பிள்ளையவர்களைக் கேட்டார். பிள்ளையவர்கள் அப்புலவர் வியக்குமாறு பொருள் விரித்தார். அவர் ஆற்றலைக் கண்டு புகழ்ந்த அவ்வூர் மக்கள் விரும்பியவாறு, பிள்ளையவர்கள் **பழைசைப் பதிற்றுப்**

**பத்தந்தாதி** என்னும் நூலொன்றை அவ்வூரிலேயே அமர்ந்து பாடிக் கொடுத்தார்.

### ஆதீன உறவு

பிறகு பிள்ளையவர்கள் பட்டீச்சுரத்தைவிட்டுப் புறப்பட்டுப் பல தலங்களைச் சுற்றிக்கொண்டு திருவாவடுதுறை சென்று, தக்கார் உதவிகொண்டு, மடத்துத் தலைவரைத் தரிசித்து, அவர்பால் தமக்கிருந்த ஐயங்கள் பலவற்றைக் கேட்டுத் தெளிந்தார்; சிறிதுகாலம் அம்மடத்தில் இருந்து, சிவமணமும் தமிழ் மணமும் கமழப் பெற்றவராய், மடத்துத் தலைவரிடம் விடை பெற்றுப் பின் திரிசிரபுரம் மீண்டார். அதன் பிறகும் பிள்ளையவர்கள் அடிக்கடி திருவாவடுதுறை சென்று, தமக்கு வேண்டியவற்றைக் கேட்டுத் தெளிந்து மீளுதல் உண்டு. திரிசிரபுரத்தில் இருந்த காலத்தில் அவர் செய்த **அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ்** முதலிய பிரபந்த நூல்கள் பலவாகும்.

### செல்வர் பாராட்டு

அவரது பெரும் புலமையில் ஈடுபட்ட செல்வர் பலர் தத்தம் ஊருக்கு அவரை அழைத்து, வரவேற்று உபசரித்துத் தத்தம் ஊரைப்பற்றிய தல புராணங்களைப் பாடுவித்துக்கொண்டனர்; பிள்ளையவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்து சிறப்பித்தனர்.

### சென்னை செல்ல வேட்கை

இவ்வாறிருக்கு நாளில், சென்னையில் சிறந்த புலவர் பலர் இருக்கின்றார் என்பதையும், சென்னை

அரசாங்கம் கல்விச் சங்கம் ஒன்றமைத்துத் தமிழ்த் தொண்டு ஆற்றிவருகிறது என்பதையும் அறிந்த பிள்ளையவர்கள், சென்னையிலுள்ள அறிஞர்களுடன் அளவளாவுதன்மூலம் மேலும் நல்ல பயிற்சியை அடைதல் கூடுமென்று கருதினார். ஆனால் சென்னை செல்ல ஏற்படும் பெருஞ் செலவுக்குரிய பொருள் தம் மிடம் இல்லை என்னும் வருத்தம் அவர் உள்ளத்தை வாட்டிக்கொண்டிருந்தது.

## சமயம் வாய்த்தது

இத்தறுவாயில், திரிசிரபுரம் இலக்குமணப்பிள்ளை என்ற செல்வர் ஒருவரின் குடும்ப வழக்கொன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற வேண்டி யிருந்தது. அதனைத் தம் சார்பில் நின்று நடத்துவிக் கத் தக்கார் ஒருவரைத் தேடிக்கொண்டிருந்த இலக்கு மணப் பிள்ளைக்கு, பிள்ளையவர்களே அதற்கேற்றவர் என்பது தோன்றியது. அவர் தம் கருத்தைப் பிள்ளை யவர்களிடம் தெரிவித்தார். இலக்குமணப் பிள்ளை என்பார் பிள்ளையவர்கட்கு அப்போதைக் கப்போது பொருள் உதவி செய்துவந்தவர்; தமிழில் பற்றுக் கொண்டு, அவர் பாடிய செய்யுள் நயங்களைச் சுவைத் தவர். சென்னை செல்வதற்குரிய வாய்ப்பை எதிர் நோக்கியிருந்த பிள்ளையவர்கள், இலக்குமணப் பிள்ளையின் கருத்துக்கு உடனே இசைந்தார்.

## சென்னையில் ஓராண்டு

பிள்ளையவர்கள் தம் மாணவர்களிடமும் நண்பர் களிடமும் விடைபெற்றுக்கொண்டு குறிப்பிட்ட

நாளில் சென்னையை அடைந்தார் ; தாம் வந்த செயலை முன்னிட்டு வழக்கறிஞர் ஒருவரை ஏற்படுத்தி வழக்கு ஒழுங்காக நடைபெறுவதற்கான ஏற்பாடு களைச் செய்தார் ; சென்னையிலிருந்து, பெரும்புலவர் களாகிய காஞ்சீபுரம் சபாபதி முதலியார், திருவம் பலத்து இன்னமுதம் பிள்ளை முதலியவர்களிடம் தமக் கிருந்த ஐயங்களைக் கூறி, விளக்கம் கேட்டுத் தெளி வடைந்தார் ; மழவை மகாலிங்க ஐயரைச் சந்தித்து அளவளாவினார் ; இடையிடையே இலக்குமணப் பிள்ளையின் வழக்கு வேலையையும் சரிவரக் கவனித் துக்கொண்டார்.

இவ்வண்ணம் ஓராண்டுக் காலம் சென்னையி லிருந்து, பெரும்புலவர்கள் பலருடைய நட்பைப் பெற் றுச் சிறப்படைந்த பிள்ளையவர்கள், இலக்குமணப் பிள்ளையின் வழக்கு முடிவடைந்த நற்செய்தியுடன் திரிசிரபுரம் மீண்டார்.

## நாள் முழுவதும் வேலை

திரிசிரபுரத்தில் பிள்ளையவர்கள் பழையபடி த்மி ழில் ஆர்வமுடைய பலருக்குப் பாடஞ் சொல்வதிலும் தமக்குக் கிடைத்த புதிய நூல்களைப் பனைஏட்டில் பிரதி செய்வதிலும் காலங்கழித்தார். அவர் இரவில் தனித் திருந்து நெடுநேரம் படித்துக்கொண்டிருப்பது வழக்கம். அவர் உறங்கும் நேரம் மிகவும் குறை வானதாகும்.

ஒவ்வொரு நாளும் அவர் வீடு புலவர்களும் தமிழ் மாணவர்களும் குழுமிய வண்ணமே காட்சி யளிக்கும். தாம் பாடிய செய்யுட்களைக் கொணர்ந்து

காட்டித் திருத்திக்கொண்டு போவோர் சிலர்; தம் நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பெற்றுப் போக நாடி வருவோர் சிலர்; தம் நூல்களை அரங்கேற்றம் செய்ய வேண்டியிருப்பதால் உடன் இருந்து சிறப்பிக்குமாறு அழைத்துச் செல்ல எண்ணி வருவோர் சிலர்; தமக்கு வேண்டியவர்களைப் படிப்பித்தற்குக் கொண்டுவந்து விட்டுப்போகும் நாட்டத்துடன் வருவோர் சிலர்; படித்த நூல்களில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளக் கருதி வருவோர் சிலர்; ஓரளவு எழுதி விட்டு மேற்கொண்டு செய்யுள் எழுதக் கற்பனை ஓடாமல் தடைப்பட்டதனால், அத்தடையை அகற்றிக் கொள்ள அவாக்கொண்டு வருவோர் சிலர். இவ்வாறுகப் பிள்ளையவர்கள் இருந்தவிடம் என்றைக்கும் தமிழார்வம் மிக்காரது கூட்டம் நிறைந்ததாகவே இருப்பது வழக்கம்.

பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் நிலையாக இருந்தாராயினும், இடையிடையே பட்டீச்சுரம், முழையூர், பழையாறை முதலிய சிற்றூர்களுக்குச் சென்று, அங்கங்கே சில நாட்கள் இருந்து, தமிழ் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்வதும், நூல்களில் ஐயமுடையோரின் ஐயங்களைத் தெளியவைப்பதுமாகக் காலங் கழித்தார்.

## ஆண் மகவு

அக்காலத்தில் பிள்ளையவர்களுக்கு ஓராண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்குத் தம் தந்தையாரின் நினைவாகச் **சிதம்பரம்** என்னும் பெயரையே பிள்ளையவர்கள் இட்டழைத்தார்.

## வியப்புக்குரிய நிகழ்ச்சி

ஒருநாள் செல்வர் ஒருவர் அயலூரிலிருந்து பிள்ளையவர்களைப் பார்க்க வந்தார். இருவரும் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தபின் உணவுண்டனர். அயலூர்ச் செல்வர் தமக்கென்று ஒதுக்கப்பட்ட ஓர் இடத்தில் படுத்து உறங்கிவிட்டார். பிள்ளையவர்கள் சொல்லவேண்டிய பாடங்களை முடித்து மாணவர்களையனுப்பியபின், சற்றுத் தூங்கிவிட்டு, வழக்கம்போல் பின்னிரவில் விழித்தெழுந்து உட்கார்ந்து, நூல் ஒன்றைப் படித்து, அதன் சுவையில் ஈடுபட்டுக் கண்ணீர் வார அந்நூலின்பத்தைத் துய்த்துக்கொண்டு இருந்தார்; இடையிடையே கண்களை மேலாடையால் துடைத்துக்கொண்டும் மேலே படித்துக்கொண்டும் இருந்தார்.

திடீரென்று விழித்துக்கொண்ட செல்வர், பிள்ளையவர்கள் படிப்பதும், கண்களைத் துடைத்துக்கொள்வதும், மீண்டும் கண்ணீர் விடுவதும் துடைத்துக்கொண்டு படிப்பதுமாயிருக்கக் கண்டார்; பிள்ளையவர்களிடம் விரைந்தோடினார்; அவர் கையிலிருந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கி எறிந்தார்; "பின்னிரவாகியும் தூங்காமல் வருந்தியழக் காரணம் யாது? குடும்பத்தொல்லை ஏதேனுமுளதோ! குறிப்பறிந்து கொடுக்க நாங்களிருக்கும்போது, வருந்தியழுது, அதை மறைக்கக் கையில் நூலை வைத்துக்கொண்டு படிப்பதுபோலப் பாவனை செய்வானேன்?" என்று கேட்டார். பிள்ளையவர்கள் அச்செல்வரைத் திருப்திப் படுத்தப் பெரும் முயற்சி எடுக்கவேண்டியவரானார்.

இறுதிவரை அச்செல்வர் திருப்தியுருமல் தம் நண்பர் களிடம் பிள்ளையவர்களைக் குறைவறக் கவனித்துக் கொள்ளுமாறு கூறிச் சென்ருர்.

**அஷ்டாவதானம்**

புரசை - **அஷ்டாவதானம் சபாபதி முதலியார்** என்ற புலவர் சேது சென்று மீளுங்கால், திரிசிரபுரம் சென்று பிள்ளையவர்களைக் கண்டார். திரிசிரபுரத் திலிருந்த புலவர்கள் முதலியாரின் அஷ்டாவதானத் தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினர் ; பிள்ளை யவர்களிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். பிள்ளையவர்களின் வேண்டுகோள்மீது ஒரு பெரிய அவை கூட்டி, அதில் முதலியார் அஷ்டாவதானம் செய்து காட்டினுர் ; பின் சில நாட்கள் வரையில் பிள்ளையவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்து சென்னை மீண்டார்.

**சோடசாவதானம்**

இவ்வாறு அஷ்டாவதானம் செய்வதில் வியப் புற்ற செல்வர் ஒருவர், பிள்ளையவர்களின் மாணவர் களுள் எவரேனும் இதை யறிவரோ என்று பிள்ளை யவர்களைக் கேட்டார். தம் மாணவருள் நினைவுக் கூர்மை மிக்கிருந்த ஒருவரைப் பதினுறு அவதானம் செய்யுமாறு சில திங்களிற் பிள்ளையவர்கள் பழக்கி, ஒரு பேரவை கூட்டி, முன்னர்க் கேட்ட செல்வர் முன்னிலையில் பதினுறு அவதானம் செய்து காட்டச் செய்தார் ; அம்மாணவருக்குச் **'சோடசாவதானம்'** என்னும் பட்டம் ஈந்தார்.

## கற்பதில் ஆர்வம்

பிள்ளையவர்கள் கல்வியில் பேரூக்கமுள்ளவராகையால் தாம் கேள்வியுற்ற புதுப்புது நூல்களையெல்லாம் பாடம் கேட்க வேண்டுமென்று விரும்பினார்; அதற்காக அடிக்கடி திருவாவடுதுறை மடத்திற்குச் சென்றார். மடத்தைச் சேர்ந்த அம்பலவாண முனிவரிடம் கம்பரந்தாதியைப் பாடம் கேட்க, பிள்ளையவர்கள் அலைந்த அலைச்சலும் பட்ட பாடும் அளவு கடந்தனவாகும்; இவ்வண்ணம் தாம் பெரும் பாடுபட்டுக் கற்றவற்றையெல்லாம் தம்மிடம் பயில வந்தவர்களுக்கு இன்முகத்துடன் பாடஞ்சொன்னார். 'ஒரு முறை பாடம் சொல்லுவது பன்னூறு முறை படித்தற்குச் சமம்' என்பது அவருடைய உட்கிடக்கை.

## புராணச் சொற்பொழிவுகள்

பிள்ளையவர்கள் இங்ஙனம் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்வதுடன் நின்றுவிடாமல், மக்களனைவரும் தமிழின் பெருமையை உணர வேண்டும் என்னும் கருத்துக் கொண்டவராய்ப் பெரிய புராணப் பிரசங்கம் செய்துவந்தார். புராணம் முடிந்ததும், மக்களும் செல்வர்களும் பிள்ளையவர்களுக்குப் பல பரிசுகள் வழங்கினர்.

## தியாகராச செட்டியார்

இந்நிலையில் பூவாளூரைச் சேர்ந்த **தியாகராச செட்டியார்** என்பவர் பிள்ளையவர்களிடம் மாணவராய் வந்து சேர்ந்து பாடங்கேட்கத் தொடங்கினார்.

செட்டியார் எப்போதும் தம் ஆசிரியரை விட்டுப் பிரியாமல் நிழல் போலத் தொடர்ந்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகள் யாவையும் குறைவறச் செய்துமுடித்து, ஆசிரியர் கற்பித்தவைகளை ஊன்றிக் கேட்டுப் பயின்று சிந்தித்துத் தெளிந்து மனத்தில் பதியவைத்தார். ஆதலால், அவரிடம் பிள்ளையவர்களுக்கு அன்பு பெருகியது. செட்டியார் பனை ஏட்டில் எழுதுவது, சிறு நூல்களைப் புதிய மாணவர்களுக்குப் பாடம் சொல்வது ஆகிய வேலைகளையும் மேற்கொண்டு, பிள்ளையவர்களின் ஆழ்ந்த அன்புக்கு ஆளானுர். பிள்ளையவர்களுக்கு அடுத்த படியாகத் தமிழ் நாட்டில் புகழ் பெற்றவர் இந்த மாண வராகிய தியாகராச செட்டியாரே யாவார்.

இவ்வண்ணம் பிள்ளையவர்கள்பால் பாடங் கேட்க வந்தவர்கள் எண்ணிறந்தவர்கள். பிள்ளை யவர்கள் சலியாமல் அவர்களனைவருக்கும் பாடம் சொல்லிவந்தார்; அதுபோலவே, தம் மாணவராகிய தியாகராச செட்டியார் வேண்டுகோளின்மீது பூவாளூர் சென்று, பூவாளூர் - பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலையும், திருத்தவத்துறை (லால்குடி) அம்மன்மீது 'பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ்' என்னும் நூலையும், திருவாரூர்த் தியாகராசர்மீது, தியாகராச லீலை என்னும் விரிவான நூலையும் இயற்றினுர். இங்ஙனம் பிள்ளை யவர்கள் சிறு பொழுதையும் வீணிற் கழிக்காமல் புதிய நூல்களைப் பாடங்கேட்டுப் படிப்பதிலும், பிற ருக்குப் பாடஞ் சொல்வதிலும், புதிய நூல்களை இயற்றுவதிலுமே ஈடுபட்டிருந்தார். அவர் நூல்கள்

இயற்றுகையில், சிந்தனையை ஒருமுகப்படுத்தி, அரிய கற்பனைகள் நிறைந்துள்ளவாறு செய்யுட்களைச் செய்வதே வழக்கம். விரைந்தோ, கேட்பாரைத் திருப்தி செய்தால் போதும் என்ற கருத்துடன் பொருள் ஆழமற்றே நூல்கள் செய்யும் வழக்கம் அவரிடம் இல்லை.

## 3. திருவாவடுதுறை ஆதீன வித்துவான்

### வள்ளல் வழங்கிய வீடு

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்கை மனத்தில் உன்னி, எவ்வமயத்திலும் தமிழ்த் தொண்டாற்றிக்கொண்டிருந்த பிள்ளையவர்கள், வாடகைக்குச் சிறு வீட்டில் குடியிருந்து அல்லலுறுவதைக் கண்ட அருணசல முதலியார் என்னும் வள்ளல், அவருக்கு மாடி வீடொன்றைச் சொந்தமாக வாங்கியளித்து, அதில் வாழச் செய்தார்.

### பங்களூர் வாழ்க்கை

பங்களூர் தேவராசப்பிள்ளை யென்னும் செல்வர், பிள்ளையவர்களின் தமிழறிவைக் கேட்டு வியந்து, அவரிடம் நேரில் பாடங்கேட்க விரும்பி, அவரைப் பங்களூருக்கு வரவழைத்தார். தேவராசப்பிள்ளை பெருஞ் செல்வராயிருந்தும், தமிழ் படிப்பதில் விருப்பங்கொண்டு முன்னரே சில தமிழ் நூல்களைப் பயின்றிருந்தார்; தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதிலும் முன்னணியில் நின்றார். அவர் பிள்ளையவர்களை மிகவும் சிறப்பாக வரவேற்றுத் தனி இல்லத்தில் இருக்கச் செய்து, அவரிடம் பல நூல்களைப் பாடங்கேட்டார். பங்களூரிலிருந்த பிற புலவர்களும், தமிழார்வம் மிக்கவர்களும் அவரிடம் வந்து பாடங்கேட்டனர். இடையிடையே பிள்ளையவர்கள் உறையூர்ப் புராணத்தைப் பாடிவந்தார்.

தேவராசப்பிள்ளை, பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டுச் செய்யுள் இயற்றும் திறமை பெற்ருர்; பிள்ளையவர்கள் சற்றும் சங்கடமில்லாமல் உறையூர்ப் புராணத்தை விரைந்து செய்வதைக் கண்டு, தாமும் அவ்வாறு ஒரு புராணத்தைச் செய்யுள் வடிவிற் பாடவேண்டுமென்று விருப்பங்கொண்டார்; கன்னடத்தில் இருந்த குசேலோபாக்கியானத்தைத் தமிழில் செய்யுளாகப் பாடத் தொடங்கினர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பங்களூரில் மிகவும் புகழ் பெற்ருர்; பிறகு திரிசிரபுரம் புறப்பட்ட போது, தேவராசப்பிள்ளை பெருந்தொகையைச் சன்மானமாக அளித்து வழி கூட்டியனுப்பினர். பங்களூரிலிருந்த வேறு பலரும் பிள்ளையவர்களுக்குப் பல சன்மானங்கள் அளித்துச் சிறப்பித்தனர்.

## நூல் பல இயற்றல்

பிள்ளையவர்கள் திரிசிரபுரம் மீண்ட பிறகு, தாம் பங்களூரில் முடித்து வைத்திருந்த உறையூர்ப் புராணத்தைத் தக்கார் முன்னிலையில் அரங்கேற்றினர். அதன் பயனாகத் திரிசிரபுரத்திலிருந்த புலவர் பலரும் செல்வர் சிலரும் சேர்ந்து பேரவை ஒன்றினைக் கூட்டி, அதில் பிள்ளையவர்களுக்கு '**வித்துவான்**' என்னும் பட்டமளித்தனர். அதன் பின், பிள்ளையவர்கள் **காந்திமதி பிள்ளைத்தமிழ், கற்குடி மாலை, எறும்பீச்சுர வெண்பா வந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, வாட்போக்கிக் கலம்பகம்** முதலிய நூல்களை இயற்றினர்.

### பாடங்கேட்டல்

பிறகு, இலக்கண விளக்கம் பாடங்கேட்க வேண்டும் என்னும் அவா பிள்ளையவர்களுக்கு ஏற்பட்டது ; அதை நல்ல முறையில் பாடஞ்சொல்ல வல்லவர் கீழ்வேளூர்ச் சுப்பையா பண்டாரம் என்பதை யறிந்து, அவரை அழைத்துவந்து, தம் இல்லத்தில் தனியிடத்தில் அமர்த்திவைத்தார்; அவரிடம் இலக்கண விளக்கம், திருக்குறள் பரிமேலழகருரை, யாப்பருங்கலக் காரிகையுரை, நன்னூல் விருத்தியுரை முதலியவற்றைப் பாடங்கேட்டார்.

### பல வகுப்பு மாணவர்

பிள்ளையவர்கள் தம்மிடம் படிக்க வந்தவர் எவரையும் விரும்பி வரவேற்றுப் பாடஞ் சொன்னர். அவருடைய மாணவருள் ஒருவர் குலாம் காதர் நாவலர் என்பவராவார். மற்ெருருவர் சவரிராயலு நாயகர் என்னும் கிறித்துவராவார். இனம், குலம், சமயம் என்பவற்றைப் பாராட்டாமல், தமிழில் ஆர்வம் உடையவர்களுக்குப் பாடம் சொல்வதும், தமிழில் ஆற்றல் உடையவர்களிடம் அன்பும் மரியாதையும் கொண்டு பழகுவதும் அவருடைய இயல்புகளாக இருந்தன.

### நல்லார் இணக்கம்

அக்காலத்தில் வேதநாயகம் பிள்ளை என்னும் கிறித்துவப் பெரியார் ஒருவர் முனிசீப் பதவியில் இருந்தார். அவர் தமிழ்ச் செய்யுள்கள் இயற்றுவதில் திறமை பெற்றிருந்தார். அவர் பிள்ளையவர்களைச்

சந்தித்து மிகவும் நெருங்கிய நட்புக் கொண்டார். அதன் பயனாக, இருவர் நட்பும் வளர்ந்து, வேத நாயகம் பிள்ளைமீது, ஐந்திணைக் கோவையாகிய குளத்தூர்க் கோவை என்னும் நூலைப் பிள்ளை யவர்கள் பாடினார்.

## சென்னை சென்று மீளுதல்

இவ்வாறு பல புதிய நூல்களை இயற்றிக் கொண்டும், பல புதிய மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டும் இனிதே காலங் கழித்துவந்த பிள்ளையவர்களைக் காணவேண்டுமென்று, சென்னை யிலிருந்த காஞ்சீபுரம் - சபாபதி முதலியார் விரும் பினார்; திரிசிரபுரத்திலிருந்த பிள்ளையவர்களுக்குச் சென்னை வருமாறு ஒரு கடிதம் எழுதினார். அக் கடிதம் கண்ட பிள்ளையவர்கள் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரது விருப்பப்படி திரிசிரபுரத்தை விட்டுப் புறப்பட்டு, பட்டீச்சுரம், திருவாவடுதுறை, தரும புரம், சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர் முதலிய இடங் களைப் பார்த்துக்கொண்டு, சென்னை சென்று, காஞ்சீபுரம் சபாபதி முதலியாரைச் சந்தித்து மகிழ்ந் தார். அவர் சென்னையிலிருந்தபோது பல நூல் களைச் செய்தார்; சென்னையைச் சுற்றிலுமுள்ள பல ஊர்களைப் பார்த்தார்; புலவர்கள் பலரைச் சந் தித்தார்; பிறகு திரிசிரபுரம் மீண்டு, பழையபடி பாடஞ் சொல்வதில் காலங்கழித்தார்.

## சீகாழியில் சிறப்புப் பெறுதல்

இங்ஙனம் இருக்கையில், எதிர் பாராச் செலவுகள் பலவற்றால், பிள்ளையவர்களுக்குக் கடன்

ஏற்பட்டுவிட்டது. அதனால், அவர் மீண்டும் சென்னை சென்று, சில நூல்களைச் செய்து பணம் பெற்றுவரலாமென்று எண்ணிச் சென்னைக்குப் புறப் பட்டார்; வழியில், சீகாழி சென்று அங்கு முனிசீப் பதவி வகித்துவந்த வேதநாயகம் பிள்ளையவர்கள் வீட்டில் தங்கினார்; அங்கிருந்தவர்கள் விரும்பியவாறு **சீகாழிக் கோவை** என்னும் நூலை இயற்றினார்; அந்நூலை வேதநாயகம் பிள்ளை முன்னிலையில் அவ்வூரிலேயே அரங்கேற்றினார். அவ்வூர்ச் செல்வர் களும், தருமபுர ஆதீனத்தலைவரும் பிள்ளையவர் களுக்குத் தக்கவாறு பல சன்மானங்களும் பண உதவியும் செய்தனர். அதன் பின்பும் அவர் சில திங் கட்காலம் வேதநாயகம் பிள்ளையவர்கள் வீட்டிலேயே தங்கி யிருந்து, சீகாழியிலிருந்த பலருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிவந்தார்.

அவர் சென்னைக்கென்று புறப்பட்டுச் சீகாழி யிலேயே தங்கிவிட்டதற்குக் காரணம், பொருள் முட்டுப்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளும் வாய்ப்புச் சீகாழியிலேயே கிடைத்துவிட்டமையே ஆகும். எனவே, பிள்ளையவர்கள் சென்னைப் பயணத்தை நிறுத்திக்கொண்டார். அவர் சீகாழியிலிருந்தபோது, தில்லைக் கூத்தப்பெருமானை வழிபட அடிக்கடி சிதம் பரம் சென்றுவந்தார்; **திருத்தில்லை யமக அந்தாதி** என்னும் நூலைச் செய்தார்.

### மயிலாடுதுறைக்கு மாற்றம்

மயிலாடுதுறையிலிருந்த செல்வர் சிலர், பிள்ளையவர்களுடைய அளப்பரிய பெருமையைக்

கேட்டு வியந்து, அவரைத் தம்மூரில் வந்து வாழுமாறு வருந்தி வேண்டினர். அவர், அடிக்கடி திருவாவடுதுறை சென்று வர மயிலாடுதுறையில் உறைவது வசதியாயிருக்கும் என்று எண்ணி, அச் செல்வர்களின் விருப்பத்திற்கு இணங்கினர். அதன் மீது அச் செல்வர்கள், பிள்ளையவர்கள் மயிலாடு துறையிலேயே நிலைத்து வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தனர். அங்கே பத்தாண்டுகள் வரையிற் பிள்ளையவர்கள் வாடகை வீடொன்றில் இருந்து, பின் சொந்தமாக வீடொன்றை விலைக்கு வாங்கிக்கொண்டு உறைவாராயினர். அவர் மயிலாடுதுறையை உறைவிடமாக்கிக் கொண்ட வமயம், முனிசீப் வேதநாயகம் பிள்ளையும் மயிலாடு துறைக்கு மாற்றப்பட்டு வந்து சேர்ந்தார். அவ் விருவரும் பெருமகிழ்ச்சி கொண்டு, அடிக்கடி சந் தித்து அளவளாவிக்கொண்டிருந்தனர்.

## ' ஆதீன வித்துவான் ' ஆதல்

மயிலாடுதுறையில் வாழ்ந்துவந்த பிள்ளை யவர்கள், அடிக்கடி திருவாவடுதுறை சென்று, அங்குப் படித்துவந்த தம்பிரான்களோடு கலந்து பழகி மகிழ்வது வழக்கம். அந்தக் காலத்தில் மடத்துச் சின்ன பட்டத்தில் வீற்றிருந்த **மேலகரம் சுப்பிர மணிய தேசிகர்** மிகுந்த தமிழ்ப் புலமை உடையவர். ஆதலின் அவர் பிள்ளையவர்களைத் தம் மடத்தில் இருக்கச் செய்து, தம்பிரான்களுக்கும் மற்றை யோருக்கும் தமிழ்ப்பாடம் கற்பித்தல் வேண்டுமென்று விரும்பினர். தம் விருப்பத்தை மடத்துத் தலைவராகிய

அம்பலவாண தேசிகரிடம் கூறி, அவரது இசைவைப் பெற்ருர். பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவாளுக அமர்த்தப்பட்டார்.

## மடத்திற் பாடம் சொல்லல்

இச்செய்தியை அறிந்த பிள்ளையவர்கள் அதனைக் கிடைத்தற்கரிய பெரும் பேருக எண்ணி மகிழ்ச்சிப் பெருக்கடைந்தார். ஆதீன வித்துவான் மடத்திலிருந்து பாடஞ் சொல்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் மடத்து அதிகாரிகள் செய்தளித்தனர். பிள்ளையவர்கள், தம்மிடம் படிக்க விரும்பிய தம்பிரான்களுக்கும் படிப்பதற்கென்றே மடத்திற்கு வந்து சேர்ந்திருந்த மற்றையோருக்கும் பாடஞ் சொல்லிவந்தார். மடத்தில் அவரிடம் தமிழ்ப் பாடம் கேட்டவர்களுள், **நமச்சிவாயத் தம்பிரான்** என்பார், பாடங் கேட்க வருமுன், பாடங் கேட்கும் நூலை முன்னதாகவே படித்து வைப்பதும், பாடங் கேட்ட பின்னர்க் கேட்டவைகளைச் சிந்தித்து மனத்திற் பதியவைப்பதுமாகிய நன்மாணவருக்குரிய வழக்கமுடையவராய் இருந்தமையால், மற்றையோரினும் அவருடைய கல்வி மேலோங்கி நின்றது.

## 'மகா வித்துவான்' பட்டம்

பிள்ளையவர்கள் பாடஞ்சொல்லவேண்டிய காலத்தில் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லியும், தாம் படிக்க வேண்டிய நேரத்தில் படித்தும் வந்தார்; பிற நேரத்தில் மடத்துத் தலைவரான அம்பலவாண தேசிகர் மீது ஒரு **கலம்பகம்** இயற்றினுர்; பின்பு அப்பிரபந்

தத்தை அத்தலைவர் முன்னிலையில், பல செல்வர்களும் புலவர்களும் கூடியிருந்த அவை ஒன்றில் அரங்கேற்றினர். அவர் இயற்றிய கலம்பகத்தின் பொருட் செறிவையும் செய்யுள் நயத்தையும் அங்கிருந்த புலவர்களனைவரும் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர்கள். அம்பலவாண தேசிகர் அவருக்கு **மகா வித்துவான்** என்னும் பட்டம் அளித்ததுடன், மடத்தில் பல மரியாதைகளுக்கும் ஆளாக்கிச் சன்மானங்கள் பலவற்றையும் செய்தார்.

## நூல் பல இயற்றல்

திருவாவடுதுறையில் பிள்ளையவர்கள் இருந்த போது பலவகையான **புராணங்களையும் பிள்ளைத் தமிழ்,** குறவஞ்சி போன்ற நூல்களையும் செய்தார். வடமொழிப் புலவர்கள் பலர் மடத்துக்கு வந்து நாள் தோறும் பரிசுபெற்றுச் செல்வராகலின், அவர்களிடத்தெல்லாம் பல புராணக் கதைகளைக் கேட்டு மனத்திற் பதியவைத்துக்கொண்டு, அவற்றைத் தமிழில் பாடுவது பிள்ளையவர்களுடைய வழக்கம். பிள்ளையவர்களுக்குப் பொருள் முட்டுப்பாடு நேர்ந்த காலங்களிலெல்லாம் தல புராணங்களைப் பாடி, அவ்வத்தலத்திலுள்ள செல்வர்கள் முன்னிலையில் அரங்கேற்றி, அவர்களால் அளிக்கப் பெறும் பல வகைச் சன்மானங்களைக் கொண்டு, தம்முடைய பொருள் முட்டுப்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளுவது பிள்ளையவர்களுடைய வழக்கமாயிருந்தது.

### பதவியும் மறுப்பும்

பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவர்கள் அக் காலத்தில் பல இடங்களில் கல்லூரி ஆசிரியர்களாக இருந்து மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தார்கள். திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தமிழ்ப் புலவர் பதவி காலியாக இருந்தது. அவ்வமயம் பிள்ளையவர்களை அப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு சிலர் வற்புறுத்தி வேண்டினர். பிள்ளையவர்களோ, ஏழை மாணவர்களுக்குப் பாடஞ் சொல்வதும், காவிரி யாற்று நீராட்டமும், சிவபெருமான் தரிசனமும் தம் மனத்திற்குகந்தவை யாதலின், தாம் எங்கும் பதவி ஏற்கச் செல்ல முடியாதென்பதைத் தெளிவுறக் கூறி விட்டார். மேலும் திருவாவடுதுறை ஆதீனம் தமக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்தளிப்பதாலும், பொருள் முட்டுப்பாடோ, வேறு மனக்குறையோ தமக்கு இன்மையாலும், திருவனந்தபுரம் செல்வ தற்குத் தமக்கு எத்தகைய தேவையும் ஏற்படவில்லை என்பதையும் பிள்ளையவர்கள் நன்கு விளக்கினர்.

### மாணவர்கள் - கல்லூரித் தமிழாசிரியர்கள்

ஆனால், அக்கல்லூரிக்குப் புலவர் ஒருவர் தேவைப்பட்டபடியால், அவருடைய மாணவர்களுள் ஒருவரையாவது அனுப்பிவைக்க வேண்டும் என்று வந்தவர்கள் வேண்டினர்கள். எனவே, கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப்புலவராயிருந்த சாமிநாத தேசிகர் என்பாரைத் திருவனந்தபுரம் கல்லூரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று பிள்ளையவர்கள் குறிப்பிட,

அவ்வாறே சாமிநாத தேசிகர் திருவனந்தபுரம் கல்லூரித் தமிழ்ப்புலவராகச் சென்றார்.

சாமிநாத தேசிகர் திருவனந்தபுரம் சென்றமையால், கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப்புலவர் பதவி காலியாயிற்று. கல்லூரி அதிகாரிகள் அதுபற்றிப் பிள்ளையவர்களிடம் கூறிய பொழுது, அவர், தம் மாணவர்களுட் சிறந்தவராகிய தியாகராச செட்டியாரை அப்பதவியில் இருக்கச் செய்தார்.

## கும்பகோணப் புராணம்

தியாகராச செட்டியார் கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப்புலவராய் அமர்ந்த பிறகு, அடிக்கடி தம் ஆசிரியரைக் கும்பகோணம் அழைத்துச் சென்று, அந்நகரில் இருந்த பிற புலவர்களுக்கும் செல்வர்களுக்கும் அவரை அறிமுகம் செய்துவைத்தார். அதன் பலனாக, அந்நகரச் செல்வர் சிலர், பிள்ளையவர்களை அணுகிக் கும்பகோணப் புராணத்தைத் தமிழில் இயற்றித் தருமாறு விண்ணப்பித்தனர். அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கிய பிள்ளையவர்கள் கும்பகோணம் சென்றார்; அங்கிருந்த திருவாவடுதுறைக் கிளை மடத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டார்; வடமொழியிலிருந்த கும்பகோணப் புராணத்தைத் தமிழ்ப்படுத்திக்கொண்டு, அதனை ஒரு நூலாகத் தமிழில் பாடி, அந்நகரத் தாசில்தாராக இருந்த சிவகுருநாத பிள்ளை என்பவர் தலைமையில் அரங்கேற்றினார். அப்புராணம் அரங்கேற்றி முடிந்த பிறகு பல பரிசுகளும் இரண்டாயிரம் ரூபாய்களும் பல்லக்கு ஒன்றும் பிள்ளையவர்களுக்குக் கிடைத்தன.

அப்புராணம் யானைமீது வைத்து ஊர்வலம் செய்விக்கப்பட்டது.

### சுற்றுப் பிரயாணமும் நூல் இயற்றலும்

பிறகு, பிள்ளையவர்கள் கும்பகோணத்தை விட்டு, சூறைக்குடி, கண்டதேவி முதலிய தலங்களுக்குச் சென்று அவ்வத்தலங்களைப் பற்றிப் புராணங்கள் பாடினார்; திருவாவடுதுறை சென்று முன்போலப் பலருக்குப் பாடஞ் சொன்னார்; அவ்வூர்மீது **யமகவந்தாதி** ஒன்று பாடினார்; பின் புதுச்சேரி சென்றார்; மயிலாடுதுறை பற்றி **மாயூரத்தல புராணம்** என்று ஒன்றை இயற்றினார்; **நாகைக் காரோணப் புராணம்** இயற்றினார்; இப்புராணம் இயற்றுகையிலேதான், இந்நூலின் முதற் பகுதியிற் காணப்பட்டவாறு முத்தாம் பாள்புரம் கோபாலப்பிள்ளை என்னும் மாணவரின் செருக்கை அடக்கிவைத்தார்; **திருவிடைமருதூர் உலா** இயற்றினார்; பின்னர்க் கல்லிடைக்குறிச்சி சென்றார்; கடைசியில் மயிலாடுதுறையில் தம் சொந்த இல்லத்தில் அமர்ந்து, தமிழறிவை வரையாமல் வழங்கி வரும் வள்ளலாக, சோறு படைத்த சோணாட்டை அறிவு படைத்த சோணாடாக ஆக்கித் தம் வாழ்நாட்களைத் தமிழ்த் தொண்டில் ஈடுபடுத்திவந்தார்.

# 4. இறுதிக்காலம்

## மாணவர்கள்

மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவ்வண்ணம் பல ஊர்களுக்குச் செல்வதும், அவ்வூரைப்பற்றித் தல புராணங்கள் பாடி யளிப்பதும், தம்மை விரும்பி வரு பவர்களுக்குப் பாடம் சொல்வதும், புதிய நூல்களை எழுதுவதுமாகக் காலங் கழித்துவந்தார். அவர் எந்த ஊர் சென்றாலும் மாணவர் கூட்டம் ஒன்று அவரைப் பின் தொடர்ந்து செல்வதே வழக்கம்.

பிள்ளையவர்கள் மாயூரத்திலிருந்த போது, அவரி டம் தமிழ் படிக்க வந்தவர்களுள் உத்தமதானபுரம் சாமிநாதையர் குறிப்பிடத் தக்கவர். சாமிநாதையர் பிள்ளையவர்களிடம் மாணவராக வந்து சேர்ந்தபோது வேங்கடராமன் என்பதைப் பெயராகக் கொண்டிருந் தார். பிள்ளையவர்களே அப்பெயரை மாற்றிச் சாமி நாதன் என்னும் பெயரிட்டு அழைக்கலானர். அவரே பிற்காலத்தில் டாக்டர் உ. வே. சாமி நாதையர் எனப் புகழ் பெற்றவர்.

பிள்ளையவர்களுடைய மாணவர்களுள் மிகவும் சிறப்பித்துக் கூறக்கூடியவர் இருவர். அவர் தியாகராச செட்டியார் என்பவரும், சாமிநாதையர் என்பவருமே யாவர். தியாகராச செட்டியார், தம் ஆசிரியர்பால் கொண்டிருந்த அன்பு அளவிடற்கரியது. அதே போன்று ஆசிரியர்பால் கண்டித்துப் பேசும் இயல்பும் அவர்மாட்டுக் காணப்பட்டது. பல சமயங்களில் தியாகராச செட்டியார் தம் ஆசிரியரைக் கடிந்து கொண்டதுண்டு. ஆனல், அவற்றிற்கெல்லாம்

காரணம், தம் ஆசிரியரின் பெயருக்கு எந்த விதமான குறைபாடும் நேரக்கூடாதென்று அவர் கருதியதே யாகும்.

## மடத்தில் மதிப்பு

இடையிடையே பிள்ளையவர்கள் திருவாவடு துறை சென்று வருவதும், அங்கேயே சில நாட்கள் தங்கித் தம்பிரான்களுக்குப் பாடம் சொல்வதும் வழக் கமாகிவிட்டன. அதே போன்று, திருவாவடுதுறை மடத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியும், பிள்ளை யவர்கள் அழைக்கப்படாமல் நடந்தேறுவதும் வழக் கமில்லை. மடத்தில் பிள்ளையவர்களுக்கு மிகச் சிறந்த முறையில் மரியாதை நடைபெறுவது வழக்கம். மடத்துத் தலைவராகிய சுப்பிரமணிய தேசிகர் சின்ன பட்டத்திலிருந்த காலத்திலிருந்து பிள்ளை யவர்கள்பால் பேரன்பு பூண்டவர். அவர் மடத்துத் தலைவராக வந்துவிட்ட பிறகு, பிள்ளையவர்களின் மதிப்பும் பெருமையும் அம்மடத்தில் பன்மடங்கு பெருகிவிட்டன. மேலும் அம்மடத்திலிருந்த குட்டித் தம்பிரான்களும், தம்பிரான்களும் பிள்ளையவர் களிடத்துப் பாடம் கேட்டவர்களாகவே இருந்தமை யால், மடத்தில் எந்த மூலை திரும்பினாலும், பிள்ளை அவர்கள் மிகுந்த மதிப்புடன் வரவேற்கப்பட்டனர்; உபசரிக்கப்பட்டனர்.

சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர்களை மடத் திலேயே இருந்து தம்பிரான்களுக்குப் பாடம் சொல் லுமாறு வேண்டினார். பிள்ளையவர்களோ பட்டீச் சுரத்துக்கு வருவதாக அவ்வூரைச் சேர்ந்த ஆறு

முகத்தா பிள்ளையவர்களிடம் வாக்களித்திருந்தார்; எனவே, பட்டீச்சுரத்துக்குப் போய்த் திரும்பிவந்து மடத்தில் தங்குவதாக மடத்துத் தலைவரிடம் கூறி, விடை பெற்றுக்கொண்டு பட்டீச்சுரம் சென்றார்.

## சென்றவிடமெல்லாம் தமிழ்த் தொண்டு

பிள்ளையவர்கள் எந்த ஊர் சென்றாலும் தமிழ் படித்தவர்கள் அவர் இருந்தவிடத்துக்கு வந்து அவரோடு பேசி மகிழ்தலுண்டு. தமிழ் நாட்டின் அந்தப் பகுதிகளில் இருந்தோருள் பெரும்பாலானவர் கள் அவரிடம் தமிழ் படித்தவர்களாகவும், அவருடைய பெருமையினையும் அறிவாற்றலையும் நன்கு அறிந்த வர்களாகவும் இருந்தபடியால், அவரிடம் சென்று இடையிடையே தங்களுக்கெழுந்த ஐயங்களைப் போக்கிக்கொள்ளுதல் வழக்கம். மேலும், சில புதிய நூல்களை அவரிடம் பாடங்கேட்டுச் செல்வதற்கு வருவோரும் பலராவர்.

## பட்டீச்சுரத்தில் பாடம் சொல்லல்

பட்டீச்சுரத்தில் பிள்ளையவர்கள் இருந்தபொழுது சத்திமுற்றப் புலவர் மரபைச் சேர்ந்த ஒருவர் பிள்ளை யவர்களிடம் நாள்தோறும் வந்து, தாம் விரும்பிய சில நூல்களைப் பாடங்கேட்டுச் சென்றார். மேலும் பிள்ளையவர்களுடைய மாணவர்கள், அவர் எந்த ஊர் சென்றாலும் அவரைத் தொடர்ந்தே செல்வது வழக்கமாதலின், போகும் வழியிலும் போய்த் தங்கும் இடங்களிலும், அங்கங்கே அவரவர்கள் கேட்கும் பாடங்களைத் தம்முடன் வந்த மாணவர்களை உட

னிருந்து கேட்டுக்கொள்ளுமாறு செய்வதும், தம் முடன் வந்த மாணவர்களுக்குச் சொல்லும் பாடங் களை அவ்வவ்வூரிலிருந்து பாடம் கேட்க வருபவர்கள் கேட்குமாறு செய்வதும் பிள்ளையவர்களுடைய வழக் கமாயிருந்தது.

பட்டீச்சுரத்தில் பிள்ளையவர்கள் தங்கியிருந்த போது, பல பிரபந்தங்களைப் பாடம் சொல்லி முடித்து, நாகைக் காரோணப் புராணத்தையும் பாடம் சொன் னுர்; அது முடிந்ததும், மாயூரத் தல புராணத்தைப் பாடம் சொன்னுர்; இவ்வாறு தம் மாணவர்களுக்கு அங்கங்கே பாடஞ் சொல்லுவது மட்டுமின்றி, பிறருக்கு எங்ஙனம் பாடம் சொல்வது என்பதையும் கற்பித்தார். ஒரு நூலை ஒரு முறை பாடம் சொல் வது அந்நூலைப் பன்னுறு முறை படித்தலுக்கு ஒப்பாகும் என்று கூறி, அவர் தம் மாணவர்களைப் பிறருக்குப் பாடங்கூறுவதில் ஆர்வம் கொள்ளுமாறு செய்தார்.

## மாணவர் பெற்ற பயிற்சி

மேலும் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்போர் நூல்களின் நுட்பத்தையும் நயத்தையும் அறிந்து கொள்வதுடன் நின்றுவிட முடியாது; இலக்கி யத்தை முதலில் நன்ருகப் பொருள் விளங்குமாறு படித்துக்கொள்ளவேண்டும்; ஒவ்வொரு செய்யுளை யும் நன்ருக மனப்பாடம் செய்து பொருள் விளங்கு மாறு தெளிவாகப் பிரித்துக் கேட்போர் உணரும் வண்ணம் சொல்வதற்குப் பயின்றுகொள்ளுதல் வேண்டும்; பிறகு அச்செய்யுளுக்குத் தெளிவாக

விளங்குமாறு பொருள் கூறக் கற்றல் வேண்டும். பிறகு பதங்களைப் பிரித்துக் காட்டி, கற்பனைச் சுவைகள், நயங்கள், பொருட்சுவைகள், சொல்முடிபு, பொருள் முடிபு, புணர்ச்சி விதிகள், சொல்லணி, பொருளணி முதலியவற்றை விளக்கிக் கூற அறிதல் வேண்டும். இவ்வளவையும் அறிந்துகொண்ட பிறகு, செய்யுள் இயற்றப் பழகுதல் வேண்டும்; பனை ஏட்டில் எழுதவும், எழுதப்பட்டிருப்பதைத் தெளிவாகப் படிக்கவும் பழகுதல் வேண்டும்.

பிள்ளையவர்கள் முதலில் தம் மாணவர்களுக்கு ஈற்றடி கொடுத்துச் செய்யுள் செய்யுமாறு கூறுவார்; தாம் இரண்டடி செய்து, மற்றிரண்டடிகளைச் செய்து செய்யுளை முடிக்குமாறு தம் மாணவருக்குக் கட்டளையிடுவார்; இவற்றில் பயிற்சி ஏற்பட்ட பிறகு, ஏதேனும் ஒரு பொருளைக் கூறி, அதனைக் குறித்துச் செய்யுள் இயற்றுமாறு பணிப்பார். இவ்வாறு தம்மிடம் பயிலும் மாணவர் ஒவ்வொருவரும் செய்யுள் இயற்றப் பழகியிருக்க வேண்டும் என்பது பிள்ளையவர்களுடைய அவா. சமயம் நேரும்போதெல்லாம் செய்யுளியற்றுமாறு தம் மாணவர்களைத் தூண்டுவது அவர் வழக்கம்.

ஒரு முறை பிள்ளையவர்கள் தம் மாணவர் கூட்டத்துடன், திருவாவடுதுறை குருபூசைக்குச் சென்றிருந்தார். குருபூசை சமயத்தில் மடத்துத் தலைவர், மடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் புலவர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசளித்தல் வழக்கம். புலவர்கள் மடத்துத் தலைவர்மீது செய்யுள்கள் இயற்றிப் படித்துப் பரிசு பெற்றுப் போவர்.

**பண்டாரம் பரிசு பெற்ற விதம்**

ஆவூர்ப் பசுபதி பண்டாரம் என்பவருக்கு இவ் வண்ணம் ஒரு செய்யுளியற்றிப் பரிசில் பெற வேண்டும் என்னும் அவா உண்டாயிற்று. ஆனல் அவருக்குச் செய்யுள் செய்யத் தெரியாது. அவர் சாதாரணமாக மடத்துக்குச் சென்றல் அவருக்குப் பரிசாகக் கிடைக்கக் கூடியது ஒரு ரூபாய்க்குக் குறைந்த சில்லரைக் காசாகவே இருக்கும். பண் டாரங்களுக்குத் தலைக்கு எட்டணு வீதம் கொடுத் தனுப்புவதே மடத்தின் மரபு. இதை விரும்பாத பண்டாரம், பிள்ளையவர்களை அணுகித் தம் நிலையைக் கூறித் தமக்கு ஒரு செய்யுள் செய்தளித்தால், தாம் உயர்வடையக் கூடுமென்று விண்ணப்பித்தார். அவர் நிலை கண்டு இரங்கிய பிள்ளையவர்கள் அவ்வாறே மடத்துத் தலைவர்மீது உடனே ஒரு செய்யுள் இயற்றி, அப்பண்டாரத்திற்கு விளங்குமாறு அதற் குப் பொருளும் கற்பித்து அனுப்பினுர். அதன் பலனுக, அப்பண்டாரம் நல்ல வகையிற் பரிசு பெற்று, மீண்டு வந்து பிள்ளையவர்களுக்கு நன்றி தெரி வித்துச் சென்றுர்.

இதனையறிந்த மற்றப் பண்டாரங்களும் பிள்ளை யவர்களிடம் வந்து துன்புறுத்தினர். பிள்ளையவர் கள் அன்று இரவு முழுவதும் பல பண்டாரங் களுக்கு மடத்துத் தலைவர்மீது பல தனிச் செய்யுள் களைப் பாடிக் கொடுத்தனுப்பினுர். இப்பாடல்களைக் கொண்டு சென்ற ஒவ்வொரு பண்டாரமும் மடத்துத் தலைவரால் தக்கபடி பரிசுகள் அளிக்கப் பெற்று மகிழ்ந்து சென்றனர்.

**மடத்துத் தலைவரின் மகிழ்ச்சி**

இரவில் இங்ஙனம் நடைபெற்ற தமது செயலை மடத்துத் தலைவர் அறிந்தால் என்ன எண்ணுவரோ என மனத்தில் ஐயங்கொண்ட பிள்ளையவர்கள், காலையில் பூசையை முடித்துக்கொண்டு, மடத்துத் தலைவரைப் பார்க்கச் சென்றார். தலைவர் அன்புடன் பிள்ளையவர்களை வரவேற்று, ''இரவு பெரும் வேடிக்கை செய்துவிட்டீர்களே! இரவெல்லாம் உறக்கம் இருந்திராது; இத்துணைப் பாடல்களையா என்மீது செய்தனுப்புவது? ஒவ்வொரு பாடலுக்கும் எவ்வளவோ சன்மானம் புரியலாம். ஆனால் மடத்து நிலைமைக்கேற்றபடி கவனிக்க வேண்டியதிருந்தது ஒருபுறம். மற்றொரு புறம் 'இச்செய்யுள்களின் ஆசிரியருக்கன்றோ கனகாபிஷேகம் செய்தல் வேண்டும்!' என்று எண்ணி, அவற்றைக் கொண்டு வந்தமைக்காக அவர்களுக்கு ஏதோ கொடுத்தனுப்பினோம்,'' என்று கூறினார்; பிள்ளையவர்கள் செயலுக்காக - பிறர் நலனடையட்டும் என்று ஆற்றிய பணிக்காக—அவரைப் புகழ்ந்தார். பிள்ளையவர்கள் மடத்துத் தலைவருக்குத் தம்முடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து, இரவு நிகழ்ந்த வகையினை அவர் உய்த்துணர்ந்திருப்பதை அறிந்து, அதனை நன்கு விளக்கினார்.

பிள்ளையவர்கள் திருவாவடுதுறையில் இருந்தபோது காசிக்கலம்பகம், சோழமண்டல சதகம் முதலியவற்றையும் மயிலாடுதுறை வந்த பிறகு, துறைமங்கலம் சிவப்பிரகாசரின் பிரபந்தங்கள், திருஅம்பர்ப் புராணம் முதலியவற்றையும் பாடஞ்சொன்னார்.

## பிள்ளைக்குத் திருமணம்

இந்நிலையில் பிள்ளையவர்கள் தம் புதல்வராகிய சிதம்பரம் பிள்ளைக்குத் திருமண வயது வந்துவிட்டதால் திருமணம் செய்தல் வேண்டுமென்று விரும்பினார்; சீகாழியைச் சேர்ந்த புலவராகிய குருசாமிப் பிள்ளை என்பாரின் மகள் மீனாட்சியம்மையைத் தம் புதல்வருக்கு இல்லறத் துணைவியாக்க உறுதி செய்தார்; தம் விருப்பத்தை மடத்துத் தலைவரிடம் தெரிவித்தார். அதைக் கேட்டு மகிழ்ந்த மடத்துத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் இத்திருமணச் செலவிற்கு ஆயிரம் ரூபாய் அளித்தார்; குருசாமிப் பிள்ளையை வரவழைத்து, பிள்ளையவர்களின் புதல்வருக்குப் பெண் தருவது பற்றிப் பேசினார். அவர் ஒப்புக்கொண்ட பிறகு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டன. மயிலாடுதுறையில் இத்திருமணம் நடந்தது. பல செல்வர்களும் மாணவர்களிற் செல்வம் படைத்தவரும் இத்திருமணத்தை முன்னிட்டுப் பெரும் பொருள் உதவி செய்தனர்.

## திருப்பெருந்துறைப் புராணம்

பிறகு பிள்ளையவர்கள், திருப்பெருந்துறைப் புராணம் என்னும் நூலொன்றைப் பாடினார். அவர் இந்நூலைப் பட்டீச்சுரத்தில் இருந்து பாடிமுடித்தார்; அதனுடன் வேறு பல சிறிய நூல்களையும் அங்கிருந்தே பாடி முடித்தார்.

## ஆறுமுகத்தா பிள்ளை

பிள்ளையவர்கள் தியாகராச செட்டியாரைத் தம் பிள்ளைபோலக் கருதிவந்தார். செட்டியாரும் அவரைத் தந்தையாராகக் கருதி நடந்துவந்தார். அதேபோன்று பட்டீச்சுரம் **ஆறுமுகத்தா பிள்ளை** என்பவரைப் பிள்ளையவர்கள் தம் புதல்வரைப் போன்றே கருதி நடத்திவந்தார். ஆறுமுகத்தா பிள்ளையும், பிள்ளையவர்களிடம் பேரன்பு பூண்டு, தம் தந்தையைப் போன்று எண்ணி, அடிக்கடி அவரைப் பட்டீச்சுரம் அழைத்துச் சென்று தம் வீட்டிலேயே பல நாட்கள் வைத்திருந்து உபசரிப்பது வழக்கம்; தம் குடும்பத் தொல்லைகளையும் அவரைக்கொண்டே தீர்த்துக் கொள்வது வழக்கம். ஆறுமுகத்தா பிள்ளையும் கண்டிப்பான குணமுடையவர். தம் ஆசிரியரும் தந்தை போன்றவருமாகிய பிள்ளையவர்களுக்குப் பணத்தொல்லை வராதபடி அவர் கவனித்துக் கொண்டார்.

## பிள்ளையவர்கள் விளையாட்டு

ஆறுமுகத்தா பிள்ளையின் மைத்துனர் சுப்பையா பண்டாரம் என்பவர் ஓர் அரைப் படிப்புக்காரர். அவர் பழைய பாடல்கள் எவற்றையாவது சமயத்துக்குத் தக்கவாறு மாற்றியமைத்துத் தமக்குத் தெரிந்த செல்வர்களிடம் சென்று படித்துப் பொருள்பெற்றுப் பிழைப்பை நடத்திவந்தார். இதை நன்கறிந்திருந்த ஆறுமுகத்தா பிள்ளை ஒருநாள் அவரை அவமானப்பட வைக்கவேண்டும் என்று விரும்பி, தியாகராச செட்டி

யார்மீது ஒரு பாடல் கூறி, குறைந்தபட்சமாக ஒரு கூடை மாம்பழமேனும் பெற்றுவருமாறு கூறினார்.

சுப்பையா பாடல்கள் செய்யும் ஆற்றல் அற்றவர் ஆகையால் வழக்கம்போல் பழம்பாடலைத் திருத்தி எடுத்துச் செல்வாரென்றும், இத்தகைய செயல்களை வன்மையாகக் கண்டிக்கும் இயல்புடைய செட்டியார் சுப்பையாவைக் கண்டித்து விரட்டுவாரென்றும், அதனைக் கண்டு தாம் தம் மைத்துனரைப் பரிகசிக்கலாம் என்றும் ஆறுமுகத்தா பிள்ளை எண்ணினார். இதனையறிந்த பிள்ளையவர்கள், ஆறுமுகத்தா பிள்ளை அறியாமல் தியாகராச செட்டியார்மீது ஒருசெய்யுள் எழுதிச் சுப்பையாவிடம் கொடுத்தனுப்பினார். சுப்பையா அதனைத் தியாகராச செட்டியாரிடம் எடுத்துச் சென்று, தாம் பாடியதாகக் கூறினார். ஆனால் செட்டியார் அச்செய்யுளியற்றியவர் இன்னவராக இருத்தல் வேண்டு மென்பதை உணர்ந்து, சில கேள்விகளைக் கேட்டதன் மூலம் சுப்பையாவைத் திணறச் செய்து, அவர் விரும்பியபடி ஒரு கூடைக்கு இரண்டு கூடையாக மாம்பழங்களை வாங்கி யனுப்பினார்; மறுநாள் நேரே பிள்ளையவர்களிடம் வந்து, தம்மீது ஒரு செய்யுள் செய்தனுப்பினமைக்காகத் தம் நன்றியைத் தெரிவித்தார்; நடந்த நிகழ்ச்சியினைக் கேட்டு நகைத்தார்.

## திருப்பெருந்துறையில் சிறப்பு

திருப்பெருந்துறைப் புராணம் முற்றுப் பெற்றவுடன் பிள்ளையவர்கள் திருப்பெருந்துறை சென்று, செல்வர்களும் புலவர்களும் கூடிய பேரவையில், திருப்பெருந்துறை மடத்துத் தலைவர் முன்னிலையில்,

அப்புராணத்தை அரங்கேற்றினர். அப்புராணம் சிவிகையில் ஊர்வலம் செய்விக்கப்பெற்ற பின்பு, பிள்ளையவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பரிசளிக்கப் பட்டது. செல்வர்களும் பரிசளித்து மகிழ்ந்தனர்.

### அறுபதாம் ஆண்டுவிழா

அதன்பின், பிள்ளையவர்கள் **சேக்கிழார் பிள்ளைத் தமிழ்** இயற்றினர்; குன்றக்குடி, தேவகோட்டை, சிங்கவனம், பாலைவனம், காரைக்குடி, புதுக்கோட்டை முதலிய இடங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திருவாவடுதுறை போய்ச் சேர்ந்தார்; பிறகு **அம்பர்ப் புராணத்தை** அம்பர் என்னும் ஊரில் அரங்கேற்றம் செய்தார். பிள்ளையவர்களுடைய அறுபதாம் ஆண்டுவிழாவை மடத்துத் தலைவர் மடத்துச் செலவிலிருந்து மிக்க சிறப்பாகக் கொண்டாடினர்.

### மகாவித்துவான் மறைவு

பிறகு, **திருவிடைமருதூர்த் திரிபந்தாதி** எழுதி முடிந்ததும், பிள்ளையவர்களுக்கு உடல்நலம் கெட்டுப் பிணி பற்றியது; கால்கள் வீங்கின. அவர் திருவாவடுதுறையிலேயே பிணியுடன் இருந்தமையால், அவர் மனைவியாரும், புதல்வரும் திருவாவடுதுறை வந்து, அவருக்கருகில் இருந்து பணிவிடை புரிந்தார்கள். எனினும், அவர் உடல்நிலை நாளுக்கு நாள் தளர்ந்தது; அவர் தமது 61 - ஆம் வயதில், (1-2-1876 -இல்) தம் இன்னுயிர் நீத்தார். காவிரிக் கரையில் ஈமச்சடங்குகள் நடந்தன.

பிள்ளையவர்கள் காலமான பிறகு, அவர் குடும்பத்திற்கு உண்டான கடனை மடத்துத்தலைவர் தீர்த்து வைத்துக் குடும்பம் நடைபெறுவதற்கும் உதவி செய்தார். வேதநாயகம் பிள்ளை, சிதம்பரம் பிள்ளைக்கு ஓர் உத்தியோகம் செய்துவைத்தார்.

# 5. குணநலன்கள்

## சலியாவுழைப்பு

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இளமையி லிருந்தே நற்குண நல்லொழுக்கங்கள் வாய்க்கப் பெற்றவர்; எக்காரணங் கொண்டும் பொய் பேசி அறியாதவர்; கள்ளங் கபடற்ற மனத்தினர். இடை யருத ஊக்கமும் உழைப்பும் உடையவர்; தம்முடைய ஊக்கத்தாலும் உழைப்பாலுமே தமிழுலகப் புகழுக்கு உரியவரானவர்.

## அமைதி

பிள்ளையவர்கள் விடியற்காலையில் விழித்து, சற் றுத் தொலைவு நடந்துசென்ற பின்னரே காலைக் கடன் களை முடிப்பார். எங்குச் செல்வதாயினும் விரைந் தோடுவதோ படபடப்பாக நடப்பதோ அவருக்கு வழக்கமில்லை. ஓசை கேட்காமல், மென்மையாக நடந்து செல்வதே அவரது இயல்பு.

## இயற்கையழகில் ஈடுபாடு

இயற்கைக் காட்சிகளைக் காணுவதில் அவருக்கு அளவற்ற ஆவல் உண்டு. சாலைகள், சோலைகள், மலைகள், ஆற்றங்கரைகள், காடுகள் முதலியவை அவர் மனத்தை மிக எளிதில் கவர்ந்துவிடும். அவர் அவற்றைப் பார்த்துக்கொண்டே பல செய்யுட்களை இயற்றியுள்ளார்.

## இடைவிடாத் தமிழ்ப்பணி

அவர் பெரும்பாலும் ஊர்களுக்குச் செல்லும் போது நடந்தே செல்வார். அவர் எந்த ஊருக்கும் தனித்துச் சென்றதில்லை. எப்போதும் அவருடன் மாணவர் கூட்டம் இருந்துகொண்டே யிருக்கும். அவர் போகும்போதும், வழியிலும்கூடப் பாடம் சொல்லுவார். பாடஞ் சொல்வதற்கென்று தனிநேர மில்லை. காலையிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரையில் அவர் பாடஞ் சொன்னவண்ணமே இருப் பார். மாணவர் பலர் அவர்மாட்டுப் பல வகையில் பாடங்கேட்பர். அவர் குளிக்கச் சென்ருலும் உடன் சென்று, போகும்போதும் குளிக்கும்போதும் சிலர் பாடங் கேட்பர்; சிலர் தம் ஐயங்களைக் கேட்டுத் தெளி வர். அவர் எண்ணெயிட்டுக் குளிக்கும்போதும் பாடம் சொல்வதுண்டு. அக்கால அறிஞர் அவரை **நடமாடும் நூல்நிலையம், நடமாடும் பள்ளிக் கூடம்** என்றெல்லாம் கூறுவதுண்டு.

## மாணவர்மீது மட்டற்ற அன்பு

அவர் உணவில் மிதமானவர்; ஒரு நாளில் இரண்டு வேளையே உண்பார். தாம் உண்பதுமட்டு மின்றித் தம் மாணவர்களுள் எவரும் உண்ணுதிருக் கப் பார்க்கமாட்டார். அவர் வீட்டில் நாடோறும் மாணவர் சிலரேனும் உண்டபடி இருப்பர். மாணவர் களுக்கு உண்டி கொடுத்து, உறையுள் கொடுத்து, உடுத்தத் துணிகள் அளித்து, ஒருசிலருக்குத் திரு மணமும் செய்துவைத்துப் பாடஞ் சொல்லிவைத்த ஆசிரியர் அவர் ஒருவராகவே இருக்கமுடியும்.

அவர் எங்குச் சென்ருலும் தம் மாணவர்கள் நலனில் முழு அக்கரை காட்டுவார்.

### நற்பண்புகள்

அவர் எவரிடமும் கடிந்து பேசியதில்லை; தமக்குக் கிடைப்பவை போதுமென்னும் நிறைமனமுடையவர்; பொருளாசை அற்றவர்; பொறுமை, தம்மை வியவாமை, புறங்கூருமை, பிறர் குற்றத்தை மறத்தல், நன்றியறிதல், இரக்கம், பிறர் குணத்தைப் பாராட்டுதல் முதலியவை அவரிடம் இயற்கையாய் அமைந்த நற்பண்புகள் ஆகும்.

### இணையற்ற நூலாசிரியர்

பிள்ளையவர்கள் செய்யுள் இயற்றுவதில் சிறந்த ஆற்றல் உடையவர். எத்தகைய வருத்தமும் இன்றிப் பிறர் வந்து பேசிக்கொண்டிருக்கும் சமயத்திலும் அவருக்குச் செய்யுள் விரைந்து வரும். அவர் ஒரு நூலை விரைவில் முடிக்கக் கருதிச் செய்யுள் கூறத் தொடங்கிஞல், ஒரே தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைச் செய்வார். அவர் பெரும்பாலும் புராணங்களையே மிகுதியாகப் பாடிஞர். ‘புராணம் பாடிய புலவர்’ என்று அவரைக் கூறுவது மிகையாகாது. அவரால்தான் இன்று தமிழ் நாட்டில் தலத்திற்கொரு புராணம் வழங்குகிறது என்னலாம். மிக அரிய கற்பனைகளை மனத்திலேயே ஒழுங்குசெய்து சில நொடிகளில் செய்யுளைக் கூறிவிடும் ஆற்றல் அவருக்கிருந்தது போன்று பிற்காலப் புலவர்களுக்கு ஏற்படவில்லை என்னலாம்.

அவர் மொத்தம் 79 க்கு மேற்பட்ட நூல்களைச் செய்யுள் வடிவில் இயற்றியுள்ளார்.

### மாணவர் செய்த சேவை

மகாவித்துவான் மாணவராகிய டாக்டர் ஐயரவர்கள் தம் ஆசிரியப் பெருந்தகையாரது அரிய வரலாற்றை பெரிய நூல் வடிவில் அரும்பாடுபட்டு வெளியிட்டனர். அந்நூல் வெளிவந்த பிறகே பிள்ளையவர்களின் சிறப்பு நாட்டவர்க்கு நன்கு புலனாயிற்று. அவ்வரிய நூல்கொண்டே இவ் வரலாற்றுச் சுருக்கம் எழுதப்பெற்றது. மாணவராய ஐயரவர்கள் தம் ஆசிரியர் இயற்றிய பல நூல்களைத் தேடிப்பிடித்துச் சோதித்துச் செவ்வையாக அச்சிட்டுள்ளார். அப்பெருநூல் தொகுதியினால் பிள்ளையவர்களின் பெரும் புலமை வெளிப்படுகிறது. அவ்விரு நூல்களால் தமது ஆசிரியர் சிறப்பை உலகறியச் செய்த டாக்டர் ஐயர் அவர்களது குரு பக்திக்கு நமது வணக்கம் உரியதாகுக.

### பிறர்க்கு உதவும் பெருந்தன்மை

பிள்ளையவர்கள், தம்மிடம் உதவி வேண்டி வருபவர்களுக்குப் பாடல்கள் எழுதிக் கொடுத்துச் செல்வர்களிடம் அனுப்பி உதவி பெறச் செய்வார் ; இவ்வாறு பலரைத் திருவாவடுதுறை மடத்துத் தலைவரிடமும் மற்றும் செல்வர் பலரிடமும் அனுப்பிப் பணவுதவி பெறச் செய்துள்ளார் ; பலருக்கு வேலைகள் கிடைக்குமாறும் செய்துள்ளார்.

நூல்கள் வாயிலாக அவருக்குப் பெருந்தொகை கிடைத்தது எனினும், மாணவர்கள் பலரைக் கூட்டி

வைத்து உணவளித்து வந்தமையால், பெருஞ் செலவு நேர்ந்தது. அதனால், எவ்வளவு பொருள் கிடைத்தா லும் வறுமைத் துன்பம் அவரை வாட்டிக்கொண்டே இருந்தது. எனினும், அவர் தம் கடமையைச் செய்ய—தமிழைப் பலருக்கும் கற்பிக்க—என்றும் பின்வாங்கிய தில்லை. தமிழ் படிக்க வேண்டும் என்று எவர், எச் சமயத்தினர், எக்குலத்தினர் வந்தாலும், இல்லை என்னாமல் கற்பித்தவர் அவர் ஒருவரே என்று அக்காலத்தார் கூறிவந்தனர். அவரால் தமிழ் மொழி பல புராணங்களையும் பிரபந்தங்களையும் பெற்றது. தமிழுக்கு அவர் ஆற்றிய அருந்தொண்டுகளிற் சிறந்தது, மக்கள் பலரைத் தக்க புலமை வாய்ந்தவர் களாகச் செய்தமை என்று கூறுதல் பொருத்த மாகும். பிள்ளையவர்கள் இன்றேல், பழந்தமிழ் நூல் களைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளிப்படுத்திய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களது தொண்டினைத் தமிழகம் பெற்றிருத்தல் முடியாது அன்றோ?

### பிள்ளையவர்கள் பாடிய நூல்கள் *

1. திருத்துருத்திக் கச்சி விநாயகர் பதிகம்.
2. திருத்துருத்திச் சுப்பிரமணிய சுவாமி பதிகம்.
3. திருவிடைமருதூர் மருதவாணர் தோத்திரப் பதிகம்.

---

* இவை இதுகாறும் வெளிவந்தவை. வெளிவராதவையும் உள. இப்பட்டியல் பிள்ளையவர்கள் தமிழ்த் தொண்டையும் கவிபாடும் ஆற்றலையும் நன்கு விளக்க வல்லது.

4. திருப்பெருமண நல்லூர்த் திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ்.
5. திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ்.
6. உறையூர் ஸ்ரீகாந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்.
7. திருக்குடந்தை ஸ்ரீமங்களாம்பிகை பிள்ளைத் தமிழ்.
8. திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ்.
9. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ்.
10. ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத் தமிழ்.
11. திருவாவடுதுறை ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ்.
12. வாட்போக்கிக் கலம்பகம்.
13. திருவாவடுதுறை யாதீனத்துக் குரு பரம்பரை அகவல்.
14. திருவாவடுதுறை ஸ்ரீ அம்பலவாண தேசிகர் கலம்பகம்.
15. சீகாழிக் கோவை.
16. திருவிடைமருதூர் உலா.
17. திருத்தில்லை யமகவந்தாதி.
18. திருச்சிராமலை யமகவந்தாதி.
19. துறைசை யமகவந்தாதி.
20. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி.
21. திருக்குடந்தைத் திரிபந்தாதி.
22. திருவிடைமருதூர்த் திரிபந்தாதி.
23. பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி.

24. திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி.
25. திருப்பழுசைப் பதிற்றுப்பத்தந்தாதி.
26. பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.
27. மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி.
28. மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆனந்தக் களிப்பு.
29. திருக்கற்குடி மாமலை மாலை.
30. கலசைச் சிதம்பரேசுவரர் மாலை.
31. திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை.
32. திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணியர் தேசிகர் மாலை.
33. தருமபுரம் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர் மாலை.
34. திருவாவடுதுறை ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடுதூது.
35. திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் மீதுள்ள தனிப்பாடல்கள்.
36. பட்டீச்சுரப் புராணம்.
37. திருவரன்குளப் புராணம்
38. திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்.
39. திருவாவடுதுறை ஸ்ரீ சிவஞான யோகிகள் சரித்திரம்.
40. திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சிமாலை.
41. திருமயிலைச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலையைச் சார்ந்த தனி விருத்தங்கள்.
42. வியாசைக் கோவை.
43. குளத்தூர்க் கோவை.

# II. வித்துவான் தியாகராச செட்டியார்

## 1. இளமைப் பருவம்

### திருக்குறளில் திருத்தமா?

உறையூரில் ஒரு வீட்டுப் புறத்திண்ணைமீது ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். முழங்கால் வரையுள்ள ஒரு துண்டு அவர் இடுப்பை அலங்கரித்தது. கையில் இருந்த ஒரு விசிறி மெல்ல ஆடி அசைந்து காற்றை எழுப்பிக்கொண்டிருந்தது. நெற்றியிலும் உடலிலும் காணப்பட்ட திருநீற்றுப் பூச்சு, அவர் சிவாகமநெறி அறிந்தவர் என்பதை மெய்ப்பித்தது. அவர் அமர்ந் திருந்த நிலை, அப்போதுதான் உணவருந்தி முடித்துச் சற்று ஓய்வாகப் புறத்திண்ணைக்கு வந்த வர் என்பதைத் தெரிவித்தது.

அவர் அருகில் ஒரு வெள்ளையர் அமர்ந்திருந் தார். பார்வைக்கு ஒரு பாதிரி போன்று அவர் காணப் பட்டார். இருவரும் பேசத் தொடங்கினர் :

பெரியவர் :—தாங்கள் யாரெனத் தெரிந்து கொள்ள என்னால் இயலவில்லை. யாரைத் தேடிக் கொண்டு இங்கு வந்துள்ளீர்கள்? ஏதேனும் முக்கிய செய்திபற்றிக் கும்பகோணம் கல்லூரித் தலைவர் தங்களை அனுப்பினரோ?

பாதிரி :—இல்லையில்லை; நானிருப்பது மதுரை மாநகரம். நான் தமிழ் பயின்று வருகிறேன்; தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன்; தங்களைக் காணவேண்டுமென்னும் கருத்துடனேயே இங்கு வந்தேன்.

பெரி :—மிக்க மகிழ்ச்சி. தமிழை நன்றாகப் படியுங்கள்; அது மிகவும் இனிமையான மொழி; இலக்கிய வளம் செறிந்தது; இலக்கண அமைதி பெற்றது. நயங்களைப் புரிந்து படித்தால், அதன் இனிமை தங்களை ஆட்கொண்டுவிடும்.

பா :—ஆம்; தமிழ் படிக்கப் படிக்கத் தெவிட்டாத் தெள்ளமுதே யாகும். நான் சில இலக்கியங்களைப் படித்துப் பின்னர் யாப்பிலக்கணம் கற்றேன்; பிறகு திருக்குறள் படித்தேன். திருக்குறள் யாப்பிலக்கணப் படி சில இடங்களில் எதுகை மோனைகள் சரிவர அமையப் பெற்றில்லை. நான் அவ்விடங்களைத் திருத்தி அமைத்துள்ளேன்; அவற்றைத் தங்களிடம் காட்டித் தங்கள் இணக்கம் பெற்றுப் போவதற்கே தங்களைத் தேடி வந்தேன்.

பெரி :—(திடுக்கிட்டவராய்) என்ன கூறினீர்? திருக்குறளில் திருத்தமா செய்திருக்கின்றீர்?

பாதிரி :—ஆம்; எதுகை மோனைகளை மட்டும் திருத்தி அமைத்துள்ளேன்; ஒன்றைப் படித்துக் காட்டுகிறேன்; பொருந்தியுளதா வெனப் பாருங்கள்!

பெரி :—போதும், போதும்; படிக்க வேண்டா.

(என்று கூறிவிட்டுச் ‘சிவ சிவா’ எனத் தலையில் கையால் அடித்துக்கொண்டு, இரு காதுகளையும் பொத்தியவண்ணம்)

“திருவள்ளுவரைவிடப் பெரிய அறிஞராகி விட்டவரே! திருக்குறளைத் திருத்தவேண்டும் என்று உம் மூளையிற் பட்டதே, அதுவே ஒரு பெரிய விசேஷந்தான். திருக்குறள் உம் கையிலா சிக்க வேண்டும்? உம் போன்றவர் கையில் சிக்கிச்

சீரழியவா திருவள்ளுவர் குறள் இயற்றினூர்? அதில் எதுகை மோனை சரியாயிருப்பதும் இல்லாததும் அவருக்குப்பின் தோன்றிய புலவர் பெருமக்கள் எவருக்கும் தோன்றுமலா உமக்குத் தோன்றிவிட்டது? போதும் உமது தமிழ்க்கொலை. உம் முகத்தில் விழிப்பதும் பெருந்தீமை'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று வெளிக்கதவை மூடித் தாளிட்டுக் கொண்டார்.

பாதிரியுடன் வந்தவர்கள் சாளரத்தருகில் போய் நின்று, துரை நெடுந்தொலைவிலிருந்து வந்திருக்கிறுர் எனவும், வீடு தேடிவந்த ஒருவரை இவ்வாறு அவமதித்தல் தமிழர் பண்பாட்டுக்கு ஏற்றதன்று எனவும் கூறினுர்கள்.

பெரியவருக்குக் கோபம் பொங்கி எழுந்தது; கண்கள் சிவக்க, ''துரையானுல் என்ன? மன்னர் மன்னனுய் இருந்தால்தான் என்ன? இவரை என் வீடு தேடி வருமாறு நானு தாம்பூலம் வைத்து அழைத்தேன்? திருக்குறளையே திருத்தும் துணிவு படைத்த இவர், தமிழைக் கொலை செய்யத் துணிந்தவர் அல்லவா? இவர் எவராயிருந்தால் எனக்கென்ன? இத்தமிழ்க் கொலைஞரைத் தமிழ் படித்தவர் எவரும் மதிக்கமாட்டார் என்பதைத் தெரிவியும்; போம்; என்னெதிரில் நிற்கவேண்டா,'' என்று கூறினுர்.

## இது கேட்டவர் யார்?

வேறு எவ்வழியிலும் பெரியவரைச் சாந்தப் படுத்த முடியாதெனக் கண்ட பாதிரியார், வந்த

வழியைப் பார்த்துக்கொண்டு பேசாமல் திரும்பிச் சென்றார்.

வெள்ளையருக்குப் பெருமதிப்பும் வெள்ளையரிடம் பேரச்சமும் இருந்த அந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், இவ்வண்ணம் தம் வீடு தேடி வந்த வெள்ளைக்காரப் பாதிரியை அவமதித்து விரட்டியடித்த நெஞ்சுரம் வாய்ந்த அப் பெரியவர் யாவர்? ஒருவர் தமிழைக் குலைக்க முயல்கிறார் என்பதறிந்தவுடன் கோபம் பொங்கியெழ, அவர் எதிரிலேயே அவருடைய அறியாமையை எடுத்துக்காட்டி அவமதித்த அப்பெரியார் யாவர்? மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் அருமை மாணவரான வித்துவான் தியாகராச செட்டியார் என்பவர் அவரேயாவர்.

## இளமைக் கல்வி

தியாகராச செட்டியாரின் தந்தையார் பெயர் சிதம்பரம் செட்டியார். அவருக்குச் சொந்தவூர் பூவாளூர். சிதம்பரம் செட்டியார் பூவாளூரில் தம் சொந்த நிலங்களைப் பயிரிட்டுக்கொண்டு, தம் குடும்பத்தைச் சிறப்பாக நடத்திவந்தார். அவருக்குப் புதல்வர் மூவர் பிறந்தனர். அவர்களுள் மூத்தவரே தியாகராச செட்டியார். அவர் 1826-ஆம் ஆண்டில் பிறந்தார்.

தியாகராசர், ஐந்து வயதடைந்தவுடன் வழக்கப்படி திண்ணைப்பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். சிதம்பரம் செட்டியார் தம் புதல்வர் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டு, பின் உழவுத் தொழிலை மேற்கொள்

ளுதல் போதும் என்று கருதினர். தாம் குறைவற்ற நிலையில் வாழ்க்கை நடத்தியது போலத் தம் புதல்வரும் உழவுத் தொழிலை ஏற்றுக்கொண்டால் இறுதிவரை குறைவற வாழலாம் என்னும் கருத்தே அவர்பால் மிளிர்ந்தது.

ஆனால் தியாகராச செட்டியார் இளமையிலேயே கல்வியில் பேரூக்கம் காட்டினர்; தமிழ்க் கல்வி, கணிதம் முதலியவற்றைக் கருத்தூன்றிப் படித்தார். எனினும், திண்ணைப் பள்ளிக்கூடக் கல்விக் காலம் முடிந்ததும், சிதம்பரம் செட்டியார் தம் புதல்வரை உழவுத் தொழிலில் ஈடுபடுத்தினர். தியாகராசர் உழவு பற்றிய பல வேலைகளை விருப்பத்துடன் கவனித்துப் பழகிக்கொண்டார்; ஆலையில் கருப்பஞ் சாறு பிழிவது போன்ற வேலைகளையும் செய்து பழகினர்; ஓய்வு நேரங்களில், தமக்குக் கிடைத்த தமிழ்ச் செய்யுள் நூல்களைப் படித்து மனப்பாடம் செய்துவந்தார்; பொருள் விளங்காத பாட்டுகளுக்கு அண்டை அயல் ஊர்களில் இருந்த புலவர்களைச் சந்தித்துப் பழகி, அவர்களிடம் பொருள் கேட்டுத் தெளிவடைந்தார்.

## செட்டியார் அவா

அக்காலத்தில் தமிழ் நாடெங்கும் புகழ் பரப்பி வந்த மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் பூவாளூர்ச் செல்வர்கள் வேண்டுகோள்மீது, அங்கு வந்து பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி என ஒரு நூல் இயற்றினர். பூவாளூரிலிருந்த சிறப்புப் பொருந்திய செல்வர்கள் மகாவித்துவானிடம்

மட்டற்ற மதிப்பு வைத்து நடந்துகொண்டதையும், மகாவித்துவானுடன் மாணவர்கள் எச்சமயத்தும் சூழ்ந்து பாடங் கேட்டுவந்ததையும், தமிழின் பெருமைகளை அவர் அடிக்கடி கூறி வந்ததையும் நேரிற் கண்ட தியாகராசர், தாமும் அப்பெரிய வரிடத்தில் மாணவராகச் சேரவேண்டும் என்னும் அவாக் கொண்டார்.

## தந்தையார் எதிர்ப்பு

தம் புதல்வரின் கருத்தை யறிந்த சிதம்பரம் செட்டியார், அதற்கு இணங்கவில்லை; தமிழிற் புலமை பெற்றோர் வறுமையில் வாடி வதங்குவர் என்றும், பள்ளியிற் படித்ததுடன் நின்று உழவை விருத்திசெய்தால் உயர்ந்த வாழ்க்கை நடத்தலா மென்றும், மேலும் படித்து அதனால் பொருளீட்டிப் பிழைக்க வேண்டிய தேவையில்லை என்றும், தம் புதல்வரிடம் கூறி, அவர் மனத்தை மாற்ற முயன்றார்.

## மகாவித்துவான் மாணவர்

ஆனால், தியாகராசர் பிடிவாதமாக இருந்து, திரிசிரபுரத்தில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த தம் சிறிய தந்தை வீட்டில் தங்கி, மகாவித்துவானிடம் மாணவராகச் சேர்வது என்று முடிவு செய்தார். மைந்தரது பிடிவாதத்தைக் கண்ட தந்தையார் இறுதியில் இணங்கினார். எனவே, தியாகராசர் பூவாளூரை விட்டுத் திரிசிரபுரம் சென்று, தமது பதினெட்டாம் வயதில் திரிசிரபுரத்தில் இருந்த மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம்

மாணவராகச் சேர்ந்தார். உண்பது, உறங்குவது தவிர, மற்றை நேரங்களில் அவரைத் தம் ஆசிரியருடன்தான் காண முடியும். ஆசிரியருடைய எழுத்துவேலைகள் முழுவதையும் அவரே ஏற்றுத் திறம்படச் செய்து, அதன்மூலம் ஆசிரியருடைய பேரன்பைப் பெற்ருர்.

## தமிழ்ப் பயிற்சி

தியாகராசர் முறையாகத் தம் ஆசிரியரிடம் பாடங் கேட்டார். முதலில் இலக்கிய நூல்கள் சிலவற்றைப் பாடங் கேட்ட பின், இலக்கண நூல்களைப் பாடங் கேட்டார். ஐந்திலக்கணங்களையும் அறிய விரும்பி, அவற்றில் நன்கு பாடம் கேட்ட பிறகு, பிரபுலிங்க லீலை, சோணசைல மாலை முதலிய நூல்களைப் பாடங் கேட்டார்.

தியாகராசர் பாடங் கேட்பதுடன் நின்றுவிடவில்லை; ஆசிரியருக்குக் குறிப்பறிந்து பணிவிடை புரிவதில் முன்னணி பெற்ருர்; தம் ஆசிரியரை நிழல் போலத் தொடர்ந்து, அவரைப் போலவே, செய்யுட்களைப் பண்ணோடு பாடவும், தெளிவாகவும் அவரவர் தகுதிக்கேற்ற மரியாதையுடனும் பேசவும் பழகிக்கொண்டார்; இவற்றுடன், செய்யுள் இயற்றும் தகுதியினையும் மற்ற மாணவர்களைவிட மிக விரைவில் பெற்ருர். இதன் பலனுக, அவர் தம் ஆசிரியரை வழிபட்டு நாள் ஒன்றுக்கு ஒரு செய்யுள் வீதமாகத் தம் ஆசிரியர்மீது 95 செய்யுட்களைப் பாடினுர்; தனிப்பாடல்கள் பல செய்தார்; திரிசிரபுரத்திற்கு அருகில் உள்ள தலங்கள் சிலவற்றைக் குறித்துப்

பாக்கள் சில புனைந்தார் ; தம் ஆசிரியர் பணித்தவாறு, தம் ஆசிரியரை வந்தணுகிய புதிய மாணவர்களுக்குத் துவக்கத்தில் சிறு நூல்களைப் பாடஞ் சொல்லி வந்தார்.

இவ்வண்ணம் தியாகராசர் மிகக் குறுகிய காலத்தில் தம் ஆசிரியருடைய பேரன்பைப் பெற்ற துடன் தமிழில் செய்யுளியற்றுதல், பாடஞ் சொல் லுதல் போன்ற புலமையை எய்திவிட்டார். தியாக ராசர் பாடங் கேட்பதிலும், அவற்றைச் சிந்தித்துக் கற்பதிலும் காட்டிய அக்கரையைப் பாடங் கற்பிப் பதிலும் காட்டினர் ; தமக்குள்ள அநுபவங்களைப் பாடங் கற்பிக்கையில் எடுத்துக் கூறி, மாணவர் உவந்து மனத்தில் பதித்துக்கொள்ளுமாறு பாடங் கூறப் பழகிக்கொண்டார்.

### ஆசிரியர் பதவி

திரிசிரபுரத்தில் இருந்த பள்ளிகளுள் ஒன்று போர் வீரர்க்குக் கல்வியளிக்க வென்று நிறுவப்பட்ட தாகும். அதில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் போய் விட்டபடியால், அப்பதவிக்கு ஒருவர் தேவை என்பது மகாவித்துவானிடம் தெரிவிக்கப்பட்டது. மகாவித்து வான் அதற்குத் தகுந்தவர் தியாகராசரே என எண்ணி அவரை அனுப்பினர்.

### மண வாழ்க்கை

அப்பள்ளியில் பதவி பெற்ற பின்பு, தியாக ராசருக்குத் திருமணம் நடந்தது. திரிசிரபுரம்— விருத்தாசலம் செட்டியாரின் புதல்வி **செல்லம்மாள்**

என்பாரை அவர் திருமணம் செய்துகொண்டார். அப்பெண்மணியார்,

" மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை "

என்னும் மறை மொழிக்கு இலக்கணமாய் அமைந்தவர் ஆதலின், தம் கணவரின் மாத வருவாயாகிய பத்து ரூபாயில் குடும்பத்தைச் செட்டாக நடத்தி, ஐந்து ரூபாயை மிச்சம் பிடித்துவந்தார்.

இவ்வண்ணம் தியாகராசரது இல்வாழ்க்கை இனிதாய் நடந்துவந்தது. அவர் பள்ளிக்கூடத்திலும் தம் புகழை விரைவில் நிலைநாட்டினர்; தம் ஆசிரியரிடத்தும் அடிக்கடி சென்று மேலும் பல நூல்களைப் பாடங் கேட்டு, அவர்பால் தம் உறவினை வலுப்பெறச் செய்து, மேன்மேலும் தம் அறிவினை வளர்த்து வந்தார்.

## 2. கல்லூரிப் பேராசிரியர்

### சிறந்த ஆசிரியர்

தியாகராசர் போர் வீரர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் அமர்ந்து சில ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, திருவரங்கத்திலிருந்த அரசாங்கத் தாலுக்காப் பள்ளிக்கூடத்திற்கு மாற்றப்பட்டார். இந்தப் பள்ளிக் கூடத்தில் தியாகராசரின் வருமானமும் ஆண்டு தோறும் அதிகமாகிக்கொண்டே யிருந்தது. அவர் ஆழ்ந்த புலமை உடையவராகையால், மாணவர்கள் விரும்பிக் கற்றுப் பயன் அடையக்கூடிய வகையில் அவர்களுக்குத் தமிழைக் கற்பித்துவந்தார். பொது வாக இலக்கியங்களைப் போன்று இலக்கணத்தைப் பாடஞ் சொல்வது எளிதன்று. மாணவர்களும் இலக்கியங்களை விரும்புவது போன்று இலக்கணப் பாடங்களை விரும்பிக் கேட்பதில்லை. ஆனால், தியாகராசர் மாணவர்கள் மிகவும் விரும்பிக் கேட்கும் வகையில் இலக்கணப் பாடங்களையும் மிகத் தெளி வாக, மாணவர்கள் உள்ளத்தில் பதியுமாறு கற்பித் தார். அவருடைய தெளிந்த அறிவும், ஆழ்ந்த புலமை யும், அஞ்சா நெஞ்சமும், கண்டிப்பான குணமும், நற்பண்புகளும் மாணவர்கள் உள்ளத்தில் அன்பை யும் மதிப்பையும் உண்டாக்கின.

செட்டியார், பிள்ளைகளுக்கென்று அரசாங்கத் தார் ஒதுக்கியிருந்த பாடங்களை விரைவில் முடித்து விட்டு, மேற்கொண்டு பல செய்யுட்கள், இலக்கணம் முதலியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தார்.

இதனால் மாணவர்கள் அவர்பால் பேரன்பு பூண்டிருந் தனர். பள்ளிக்கூடத்தில்மட்டும் இன்றி, வீட்டிலும் சென்று சில மாணவர்கள் பாடங்கேட்கத் தொடங்கி னர். தியாகராசர் நாள்தோறும் கொள்ளிடம் சென்று நீராடிவருவது வழக்கமாகையால், மாணவர்கள் சிலர் அவருடனேயே சென்று அவருக்கு வேண்டும் பணிவிடைகளைச் செய்துவந்தனர். ஆசிரியரும் ஆற்றுக்குப் போகும்போதும், திரும்பி வரும்போதும், இலக்கண, இலக்கியப் பாடங்களை அவர்களுக்குக் கற்பித்துவந்தார்.

## நாவலர் நட்பு

திருவரங்கத்தில் தியாகராசர் வாழ்ந்திருந்த போதிலும் அடிக்கடி திரிசிரபுரம் சென்று தம் ஆசிரி யரைக்கண்டு வணங்கி, தமக்கேற்படும் ஐயங்களை எல்லாம் அவர்பால் கேட்டுத் தெளிவடைவது வழக்கம். ஒருமுறை யாழ்ப்பாணத்து நல்லூர் - **ஆறுமுக நாவலர்** திரிசிரபுரம் வந்திருப்பதை அறிந்து, அவரைக் காணத் தியாகராசர் சென்றிருந்தபோது, அவர், அழகாபுரி உமையம்மையைக் குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடுமாறு தியாகராசரிடம் கூறினர். அவ்வூர்க்காரர்கள் தம்மைப் பாடுமாறு கேட்டுக் கொண்டதாகவும், தமக்கு ஓய்வின்மையால், அப் பொறுப்பைத் தியாகராசரிடம் விடுவதாகவும், அதைச் செய்வதற்குத் தக்க ஆற்றலும் பொறுப்பும் தியாகரா சருக்கிருப்பதைத் தாம் நன்கு அறிந்திருப்பதாகவும் ஆறுமுகநாவலர் தெரிவித்தார். பிறகு, அவர் யாழ்ப் பாணம் சென்று அங்கிருந்து கடிதம் எழுதிப்

பிள்ளைத்தமிழை எழுதி முடிக்குமாறு தியாகராசரைத் தூண்டினார்.

### ஆசிரியர் பக்தி

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குத் தியாகராசரது கல்வியில் நன்னம்பிக்கை உண்டு. பிள்ளையவர்கள் தம் புதிய நூல்களை அரங்கேற்றம் செய்யும்போதெல்லாம் தியாகராசரை உடன்வைத்துக்கொண்டே செய்வது வழக்கம். தியாகராசர் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவு பெற்றவராகலின், தம் ஆசிரியருடைய நூல்களின் சுவை மிகுந்த பகுதிகளை மற்றையோரினும் மிகுதியாகச் சுவைப்பதுண்டு; அதுவன்றி, எவரேனும் கேள்விகேட்டாலோ, அல்லது குறையேதும் கூறினாலோ, அவற்றிற்கெல்லாம் சுடச்சுட விடையிறுப்பதில் வல்லவர். பிள்ளையவர்கள் சாந்த மூர்த்தியாகையால் எவரையும் கண்டிக்க மாட்டார். தியாகராசரோ, தவறு கண்ட இடத்தில் அஞ்சாது கண்டிக்கும் இயல்பினர் ஆதலால், தம் ஆசிரியரது நூலில் எவர் குறை கூறுவதாயினும் சரி, அக்குறைக்குரிய காரணம் ஒழுங்கற்றதாயின், வன்மையாகக் கண்டித்து, மதிப்பிழந்து ஓடுமாறு செய்துவிடுவார்.

### ஆசிரியரது மதிப்புப்பெற்ற மாணவர்

ஒரு முறை மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய திருப்பெருந்துறைப் புராணத்தைத் திருவாவடுதுறை மடத்துத் தலைவர்முன் வாசித்துக் காட்டவேண்டுமென்று விரும்பியபோது, தியாகராசரைத் திருவாவடுதுறைக்கு வருமாறு கடிதம் எழுதி

ணூர். அக்கடிதத்தில், ‘ சிறவாதவற்றையும் சிறப்பிக்க வல்லவன் ’ என்று தியாகராசரைப் பிள்ளையவர்கள் பாராட்டி எழுதியிருந்தார். இதிலிருந்து, பிள்ளை யவர்கள் தம் மாணவர்மீது எத்தகைய அன்பையும் நம்பிக்கையையும் வைத்திருந்தார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறதன்றோ ?

வாட்போக்கிக் (இரத்தினகிரி என்னும் ஊரின் மற்றொரு பெயர்) கலம்பகம் என்னும் நூலொன்றைப் பிள்ளையவர்கள் இயற்றியிருந்தார். அவ்வூருக்குச் சென்று அந்நூலை அரங்கேற்றம் செய்யப் பிள்ளையவர் களுக்கு ஒய்வில்லை. அதனால் அவர் தம் மாண வராகிய தியாகராசரையே அதனை அரங்கேற்றம் செய்யுமாறு பணித்தார். தியாகராசர் தம் ஆசிரியர் கட்டளையைத் தலைமேல் தாங்கி, சில மாணவர்களை உடனழைத்துச் சென்று, அக்கலம்பகத்தை நல்ல முறையில் அரங்கேற்றம் செய்து, தம் ஆசிரியருடைய நற்புகழ் பரவுமாறு செய்தார்.

## கும்பகோணத்தில் ஆசிரியர் பதவி

தியாகராசர் திருவரங்கத்தில் பள்ளிக்கூடத் தமிழாசிரியராக இருந்தபொழுது, கும்பகோணத்தில் இருந்த மாகாணக் கல்லூரியில் தமிழாசிரியர் வேலைக் குத் தக்கார் ஒருவர் வேண்டியிருந்தார். அதுபற்றி அதிகாரிகள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் கேட்டபொழுது, தியாகராசரே அப்பதவிக்கு ஏற்றவர் என்று அவர் கூறியபடியால், தியாகராசர் உடனே கும்பகோணம் அழைக்கப்பட்டு மாகாணக் கல்லூரி யின் முதல் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார்.

தம் ஆசிரியராகிய பிள்ளையவர்கள், திரிசிர புரத்தை விட்டுத் திருவாவடுதுறை வந்துவிட்டமை யால், திருவரங்கத்திலிருக்க மனமற்றிருந்த தியாக ராசருக்குத் திருவாவடுதுறைக்கு அருகிலேயே இருக் கும்படி வேலை கிடைத்ததில் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதனால் அவர் மிக்க மகிழ்ச்சியுடன் அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

## சிறப்புறுதல்

தியாகராசர், மாணவர்களின் தகுதி யறிந்து கற் பித்து வந்தார்; தமிழ் வகுப்பில் ஊக்கமற்ற மாணவர் களையும் தம் திறமையினால், தமிழில் பேரார்வம் கொள்ளச் செய்தார். மாணவர்கள் தியாகராசரிடம் பெருமதிப்பும் அன்பும் கொள்ளலாயினர். மாணவர் களின் மனத்தைக் கவர்ந்தது போலவே, கும்ப கோணத்திலிருந்த பல பெரியவர்களின் மனத்தையும் தியாகராசருடைய கல்வித்திறனும் நற்பண்பும் ஒழுக் கமும் கவர்ந்துவிட்டன. பெரியோர் பலர் அவருக்கு உற்ற நண்பராயினர்.

## மடத்தில் மதிப்பு

கும்பகோணம் வந்த பிறகு தியாகராசர், அடிக் கடி திருவாவடுதுறை சென்று தம் ஆசிரியரைக் கண்டுவந்தார். பிறகு பிள்ளையவர்கள் மயிலாடு துறையில் நிலையாக உறைய வந்துவிட்டமையால், தியாகராசர் தம் ஆசிரியரை அடிக்கடி கண்டு பேசி மகிழ வாய்ப்புக் கிடைத்ததென்று மகிழ்ந்தார்; தம்

ஆசிரியருடன் திருவாவடுதுறைமடம் சென்ற அவர், அம்மடத்திலிருந்தவர்களின் நன்மதிப்பைப் பெற்ருர். அக்காலத்தில் சின்னபட்டத்திலிருந்த சுப்பிரமணிய தேசிகர், பிள்ளையவர்களின் மாணவர் களுட் சிறந்தவர் தியாகராசர் என்பதையும், தமிழில் ஆழ்ந்த புலமையுடையவர் என்பதையும் அறிந்து அவரிடம் அன்பு பூண்டார்.

## கும்பகோணத்தில் பிள்ளையவர்கள்

கும்பகோணப் புராணம் அரங்கேற்றப்பட்டபோது மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கும்பகோணத்தில் வந்து தங்கினுர். இதை நல்ல வாய்ப்பாகக் கருதிய தியாகராசர் நாள்தோறும் பள்ளிவேலை முடிந்த வுடன், அவர் இருப்பிடம் சென்று, ஏடெழுதுதல், எவ ரேனும் வினவெழுப்பினுல் விடையிறுத்தல் போன்ற தம்மாலியன்ற உதவிகளை எல்லாம் தம் ஆசிரிய ருக்குச் செய்துவந்தார்.

ஒரு முறை தியாகராசர் பிள்ளையவர்களைத் தம் முடைய கல்லூரிக்கு அழைத்துச் சென்று, தம் மாணவர்களை அறிமுகப்படுத்தினுர். பிள்ளையவர்கள் அம்மாணவர்களைப் பரிசோதித்தார். அவர் மனம் மகிழுமாறு அம்மாணவர்கள் விடையளித்தனர். பிள்ளையவர்கள் தியாகராசரின் கற்பிக்கும் திறமை யைப் பாராட்டிச் சென்ருர்.

## மாணவருக்குப் பாராட்டு

தியாகராசர் தமக்குத் தெரியாதவற்றைத் தம்மை விட உயர்ந்த அறிஞர்கள்தாம் தீர்த்துவைக்க வேண்டும் என்னும் கருத்துடையவர் அல்லர். தமக்கு ஐயம் நேருமிடங்களில் தம் மாணவர் உள்ளத்தில் பட்ட கருத்துக்கள் தமக்குப் பொருந்தியிருப்பின், அவ்வுண்மைகளை ஏற்று, அவற்றைக் கூறிய மாண வரைப் பாராட்டுவது அவருடைய இயல்பாக இருந்தது.

ஒரு முறை வகுப்பில் கம்பராமாயணப் பாடம் நடந்துகொண்டிருக்கையில் அவருக்கு ஒரு சொல் லின் பொருளில் ஐயம் எழுந்தது. ஒரு மாணவன் அதற்கு ஊகமாக ஒரு பொருள் கூறினான். அப் பொருள் அங்குப் பொருந்தியிருந்ததை அறிந்து, தியாகராசர் அம்மாணவனைப் பாராட்டியதுடன், தம் மிடமிருந்த கம்பராமாயண நூலில், அச்சொல்லையும் பொருளையும் அதைக் கூறின மாணவன் பெயரையும் குறித்துக்கொண்டார்.

## புன்கவிஞர் நூலுக்குப் பாயிரம்

அவரிடம் சிறப்புப்பாயிரம் வாங்கிக்கொள்வது தங்கள் நூற்களுக்குப் பெருமை யளிப்பதாகும் என்று அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கருதினார்கள். ஆனால் நூற்கள் பிழையற்று இருந்தாலன்றித் தியாக ராசர் சிறப்புப்பாயிரம் கொடுக்கமாட்டார். அரை குறைப் படிப்புள்ளவர்கள் அவரை ஏமாற்றிவிட முடி யாது. இதனை யறிந்திருந்தும், புன் கவிஞர் ஒருவர், அவரிடம் பன்முறை வந்து சிறப்புப்பாயிரம் தருமாறு

தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தார். அவரோ கவிஞரைக் கண்டித்து விரட்டிவிட்டார். அப்புன் கவிஞர் சற்றும் அஞ்சாமல், அவருடைய ஆசிரியராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பன்முறை சென்று, அவர் மனத்தில் இரக்கம் உண்டாகச் செய்து, அவரிடம் ஒரு சிறப்புப்பாயிரம் பெற்றார்; அதனுடன் போகாமல், தியாகராசரிடம் வந்து, அதைக் காட்டி, " தங்கள் ஆசிரியரே கொடுத்திருக்கையில் தாங்கள் கொடுக்கக் கூடாதா?" என்று கேட்டார். அவர் தொல்லையைப் பொறுக்கமாட்டாத தியாகராசர், சிலேடைப் பொருளில் அப்புன்கவிஞரை இழித்துரைத்து ஒரு பாயிரம் செய்தளித்தார். அது வெறுப்புப் பாயிரமாக இருந்ததறியாத அப்புன்கவிஞர் அதைப் பெற்று மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டார்.

மறு நாள் தியாகராசர் பிள்ளையவர்களிடம் வந்து, " செய்யுளியற்றத் தெரியாதவர்களுக்கெல்லாம் சிறப்புப்பாயிரம் கொடுத்து விடுகிறீர்களே! இது தகுமா!" என்று கேட்டார். பிறகு தாம் கொடுத்த பாயிரத்தைப்பற்றிப் பொருள் கூறி அங்கிருந்தவர்களைச் சிரிக்கவைத்தார்.

இவ்வாறு தவற்றைக் கண்டிக்கும் இயல்பு அவரை ஒரு வழக்கில் இழுத்துவிட்டது. சிலர் அவரை இறுமாப்பு உடையவர் என்றும் கருதினர். பிள்ளைத்தமிழ் பாடிய ஒரு புலவர் தம் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வேண்டித் தியாகராசரிடம் வந்தார். அந்நூலைப் படித்துக் காட்டுமாறு கேட்ட தியாகராசர், அதில் பல வகையான பிழைகள் இருப்பதை அறிந்தார்; வழக்கம் போல் அவரைக் கண்டித்து,

இனி இவ்வாறு பிழைபட்ட செய்யுட்களை இயற்றுதல் கூடாதென்று கூறி யனுப்பிவிட்டார். வந்தவர் அவர் தம்மை அவமதித்ததாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ஆனால் வழக்கினிடையில், தம்மீதே குற்றம் இருக்கிறது என்பதை உணர்ந்து அவர் வழக்கை நிறுத்திக்கொண்டார். இந்நிகழ்ச்சியால், தியாகராசரின் மதிப்பு முன்னிலும் பன்மடங்கு உயர்ந்தது.

# 3. கல்லூரியிலும் மடத்திலும் கல்விப்பணி

## நன்னூல் வெளியீடு

தியாகராசர் கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியராயிருந்த காலத்தில், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ( High court vakil ) ஒருவர், நன்னூலில் இருநூறு சூத்திரங்களை நீக்கிவிட்டு, மற்றவற்றை மட்டும் தொகுத்துச் சிறு நூலாக வெளியிட்டார்; அதைப் பள்ளிக்கூடங்கள் பலவற்றிற்கு அனுப்பிப் பாடபுத்தகமாக வைக்குமாறு வேண்டினார்; தாம் தொகுத்துள்ள சூத்திரங்களே மாணவர்கள் படிப்பதற்குப் போதுமானவை என்பது அவர் கருத்து. அவருடைய தயவுக்காகச் சிலர் அந்நூலைப் பள்ளிக்கூடப் புத்தகமாக வைத்தனர்.

அந்நூல், தொகுப்பாசிரியரின் வேண்டுகோளுடன் கும்பகோணம் கல்லூரிக்கும் வந்து சேர்ந்தது. தியாகராசர் கவனத்துக்கு அந்நூல் கொண்டுவரப்பட்டது. அதைப் புரட்டிப் பார்த்த தியாகராசர், "இது மாணவர்க்கு ஏற்ற நூலன்று" எனக் கூறிவிட்டார். தியாகராசர் அந்நூலைத் தள்ளிவிட்ட செய்தி யறிந்த மற்றப் பள்ளிக்கூடங்களிலும் அது பாடநூலாக வைக்கப்படவில்லை.

நடந்தவற்றை யறிந்த வழக்கறிஞர் தியாகராசரை ஒரு நாள் நேரில் கண்டு கண்டிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டிருந்தார். வழக்கறிஞரின் நண்பர்

ஒருவர் கும்பகோணம் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராயிருந்தார். ஒரு நாள் அவ்வழக்கறிஞர், தம் நண்பரைப் பார்க்க வருவது போலக் கல்லூரிக்கு வந்து, தியாகராசர் இருந்த வகுப்பைத் தேடிச் சென்றார்; வகுப்பில் தியாகராசர் சொல்லிக்கொண்டிருந்த பாடத்தைக் கவனித்தார்; அவருடைய கற்பிக்கும் ஆற்றலையும் மாணவர்கள் அவரிடம் நடந்துகொண்ட முறையையும் நேரிற்கண்ட அவர், ஒன்றும் சொல்ல முடியாமல் திரும்பிவிட்டார்.

பள்ளிக்கூடம் முடிந்த பிறகு, தியாகராசர் ஆங்கில ஆசிரியருடன், அவர் வண்டியிலேயே போவதுதான் வழக்கம்; அன்றும் அப்படியே அவருடன் சென்றார். ஆனால், அன்று நன்னூலைப் பதிப்பித்தவரும் வண்டியில் வந்தார். ஆங்கில ஆசிரியர் அவ்விருவரையும் அறிமுகம் செய்துவைத்தார்; தம் நண்பர் நன்னூற் சுருக்கம் வெளியிட்டிருப்பதையும் அறிவித்தார். வண்டி போய்க்கொண்டிருக்கையிலேயே, வழக்கறிஞர், தம் நன்னூல் கும்பகோணம் கல்லூரியில் வைக்கப்படாமைக்குக் காரணம் கேட்டார். தியாகராசர், '200 சூத்திரங்கள் நீக்கப்பட்டமை தவறு' என்றார். அவர், 'பிள்ளைகளுக்கு அவை தேவையில்லை' என்றார். 'பிள்ளைகள் விஷயம் ஆசிரியர்களுக்கல்லவா தெரியும்?' என்றார் தியாகராசர். இந்த வகையில் பேச்சு முற்றிக் கடைசியில், ஆங்கில ஆசிரியர் சமாதானம் செய்ய, இருவரும் அடங்கினர். இச் சொற்போரில் தியாகராசர், வழக்கறிஞரை வெட்கிப் பின்வாங்குமாறு செய்துவிட்டார். ஆடம்பர ஆரவாரங்களைக் கண்டோ, பட்டங்களைக்

கண்டோ, தியாகராசர் அஞ்சியதில்லை. தவறு செய்தவரை அவர் கண்டிப்பதில் தவறியதில்லை.

**உண்மை அறிவதில் நிபுணர்**

தியாகராச செட்டியார் தம் ஆசிரியர்மாட்டு அளவுகடந்த அன்புடையவர்; அதுபோன்றே அவருடைய செய்யுட்களை நன்கு படித்து உணர்ந்தவர். அவர் செய்யுளை வேறொருவர் இயற்றியதாகக் கூறித் தியாகராசரிடம் தப்பிவிட முடியாது. ஒருமுறை, பிள்ளையவர்கள், தாம் இயற்றிய கீர்த்தனை ஒன்றைச் சாமிநாதையர் என்னும் மாணவரைக் கொண்டு இசையோடு பாடவைத்து, அக்கீர்த்தனையை இயற்றியவர் சாமிநாதையரே என்று தியாகராசரிடம் கூறினார். ஆனால் தியாகராசர் அக்கீர்த்தனையைக் கூர்ந்து கவனித்து, "இசை சாமிநாதையருடையது; கீர்த்தனை தங்களுடையது," என்றார். பிள்ளையவர்கள் எத்தனையோ முறை கூறிப்பார்த்தும், தியாகராசர் கண்டிப்பாக ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். பிறகு சாமிநாதையர், அக்கீர்த்தனை பிள்ளையவர்கள் இயற்றியதே என்னும் உண்மையைக் கூறிவிட்டார்.

பிள்ளையவர்கள், மற்றொரு முறை ஆறுமுகத்தா பிள்ளையின் மைத்துனர் சுப்பையா பண்டாரம் என்பாரிடம் தியாகராசர்மீது ஒரு செய்யுள் பாடிக் கொடுத்து, அதை அப்பண்டாரமே பாடியதாகக் கூறிப் பரிசு பெற்றுவருமாறு தியாகராசரிடம் அனுப்பிவைத்தார். அப்பண்டாரம் அதேபோன்று அப்பாடலைத் தியாகராசரிடம் கொண்டுபோய்ப் படித்துக்காட்டி, பொருளும் கூறித் தாம் ஓர் ஏழைப்

புலவரென்றும், பரிசில் ஏதேனும் தருதல்வேண்டும் என்றும் கோரினர். ஆனல் தியாகராசர், அச்செய்யுள் தம் ஆசிரியர் இயற்றியதே என்பதை நன்கறிந்துகொண்டு, சுப்பையா பண்டாரத்தை இலக்கணக் கேள்விகள் கேட்டுத் திணறவடித்தார்; கடைசியாக அப்பண்டாரம் விரும்பியபடியே மாம்பழங்களை வாங்கி இரண்டு கூடைகளில் நிரப்பி யனுப்பிவிட்டார். இது பிள்ளையவர்கள் வரலாற்றிற் கூறப்பட்ட செய்தியே.

ஆனல் தியாகராசர் மறுநாளே பிள்ளையவர்களிடம் வந்து, தம்மீது ஒரு செய்யுள் இயற்றினமைக்காகப் பிள்ளையவர்களுக்கு நன்றி செலுத்தி, அச்செய்யுளுக்காகவே தாம் பரிசில் கொடுத்ததாகவும் அதைக் கொணர்ந்த சுப்பையா பண்டாரத்திற்கு அன்றென்றும் தெளிவாகக் கூறினர். அவ்வமயத்திலும், அச்செய்யுளை இயற்றியவர் சுப்பையா பண்டாரமே என்பதைத் தியாகராசர் நம்புமாறு செய்ய, பிள்ளையவர்களாலும் மற்றையோராலும் முடியவில்லை.

பின்னெரு சமயம், முகப்புப்பக்கம் இல்லாத நூல் ஒன்றை இராமசாமிப் பிள்ளை என்பவர் தியாகராசரிடம் கொணர்ந்து காட்டித் திருவாவடுதுறையைச் சேர்ந்த அடியார்களில் ஒருவர் அந்நூலைச் செய்திருப்பதாகக் கூறி, அந்நூலின் கற்பனையழகை எடுத்துக் காட்டி வியந்தார். தியாகராசர் அச்செய்யுட்களில் சிலவற்றைப் படித்துப் பார்த்து, அந்நூல் தம் ஆசிரியர் இயற்றியதே என்று கூறிவிட்டார். இராமசாமிப் பிள்ளை எத்துணையோ சமாதானங்களை எடுத்துக்

கூறியும், தியாகராசர் பிடிவாதமாக அது தம்மாசிரிய ருடைய நூலே என்றும், அது போன்று கற்பனை மிக்க செய்யுட்களைப் பிறர் இயற்ற முடியாதென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார். அதன் பிறகே இராம சாமிப்பிள்ளை அந்நூல் அண்மையில் பிள்ளையவர் களால் செய்யப்பட்டதுதான் என்னும் உண்மையைக் கூறித் தியாகராசர் தம் ஆசிரியர் நூல்களில் கொண்டுள்ள ஆழ்ந்த அறிவை எண்ணி வியந்தார்.

## ஆசிரியர்—மாணவர் விளையாட்டு

ஒரு முறை தியாகராசர், திருவாவடுதுறை மடத் துக்குச் சென்ற சமயத்தில், பிள்ளையவர்கள் மடத் தில் இருந்தவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண் டிருந்தார். தியாகராசர் அதைப் பார்த்துக்கொண் டிருந்தார். பிள்ளையவர்கள், "இவ்வாறு வளர்ந்த பிள்ளைகளுக்குப் பாடம் சொல்வதால்வரும் தொந்தரை பொறுக்கக் கூடவில்லை; சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது எளிது. அதிலும் கல்லூரியில் நிறையச் சம்பளம் பெற்றுக்கொண்டு பாடஞ் சொல்வது இன்னும் எளிது," என்று கூறினர். அதைக் கேட்ட தியாகராசர், "கல்லூரி மாணவர் களுக்குக் கற்பிப்பதுதான் கடினம். பிள்ளையவர்கள் கல்லூரிக்கு வந்து பாடம் சொன்னல் மாணவர்கள் ஆட்டிப் படைத்துவிடுவார்கள். மடத்தில் சொல்வது போல், கல்லூரியில் பாடஞ் சொல்வது எளிதான செயலன்று," என்று கூறினர்.

அங்கிருந்த மாணவர்கள் தியாகராசர் இவ்வாறு கூறியதைக் கண்டு வியந்தார்கள். பிள்ளையவர்

களோ அன்று ஒன்றும் கூருமல் பேசாமல் இருந்து விட்டார். மற்ருெரு நாள் பாடம் கற்பிக்கும் சமயத்தில் தியாகராசர் மடத்துக்குச் சென்ருர். தியாகராசரைக் கண்ட பிள்ளையவர்கள் மெல்ல அவரை அங்கே உட்காரவைத்து, சிறிது நேரம் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்குமாறு கூறிச் சற்று வெளியிற் சென்ருர்.

அங்குப் படித்தவர்களுட் சிலர் தியாகராசரைத் திணற வைக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தவர் ஆதலாலும், பல நூல்களைப் பாடங் கேட்டிருந்தவர் ஆதலாலும், அவர் பாடஞ் சொல்லி வரும்போது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான கேள்வியைக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். தியாகராசர் திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் சமயத்தில் பிள்ளையவர்கள் வந்து, மாணவர்களை அடக்கிவிட்டு, மேற்கொண்டு தாம் பாடஞ் சொல்லத் தொடங்கினுர்.

## தியாகராசர் பெருந்தன்மை

தியாகராசர், ஓரளவு படித்திருக்கிறவர்களுக்குப் பாடஞ் சொல்வது எத்துணைத் தொந்தரை மிக்கது என்பதை இந்நிகழ்ச்சியின்மூலம் நன்கறிந்து கொண்டார். அவர் மறுநாள் பிள்ளையவர்களைக் கண்டு, தாம் முன்னொரு முறை இறுமாந்து கூறியதற்கு வருந்தி, கல்லூரிப் பிள்ளைகளுக்குப் பாடங் கற்பிக்கக் கதை கூறும் திறனும், நூல்களில் சிறிதளவு பயிற்சியும், அதிகாரம் செலுத்தும் வல்லமையும் இருந்தாற் போதுமென்பதையும், மடத்துப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்ல ஆழ்ந்த கல்வியும்

ஆராய்ச்சியும் மிகவும் தேவை என்பதையும் தாம் அறிந்துகொண்டதாகக் கூறினர்.

## இனிமையும் கண்டிப்பும்

தியாகராசர் கல்லூரியில் மாணவர்கள் மனம் உவக்குமாறு இலக்கண, இலக்கிய பாடஞ் சொல்வதில் திறமை பெற்றிருந்தாற் போலவே பிறரிடம் பேசுவதிலும் பெருமை பெற்றிருந்தார். வேடிக்கையாகப் பேசினுலும், கோபமாகப் பேசினுலும், அவர் பேச்சில் இடையிடையே செய்யுட்கள் மேற்கோள்களாக வந்து நிற்கும். தமிழ் நூலினைப் பிழைபட்ட முறையில் எவர் எங்கு எழுதினுலும் சரி, தியாகராசரின் கண்களில் அந்நூல் பட்டுவிட்டால், அந்நூலை எழுதியவருக்கு வசைமாரி கிடைக்கும்.

எந்த வேலையாயிருந்தாலும் ஒழுங்கு முறையை மீறக்கூடாதென்பது அவருடைய எண்ணம். தயவு தாட்சண்யங்களுக்காக ஒழுங்கை மீறினல், உடனே அவருக்குக் கடுங்கோபம் வந்துவிடும்.

## புலிக்குட்டித் தம்பிரான்

தம்மிடம் உதவி நாடியவர்களுக்கு நேரிய முறையில் உதவி செய்ய முயல்வது தியாகராசரின் இயல்பு. ஒரு முறை **புலிக்குட்டித் தம்பிரான்** என்பார் திருவாவடுதுறை மடத்துத் தலைவரின் கோபத்துக்கு இலக்காகி வெளியேற்றப்பட்டார். புலிக்குட்டித் தம்பிரான் மீண்டும் மடத்தில் சேர வேறு வகை அறியாதவராய்த் தியாகராச செட்டியாரிடம்

வந்து, தம் நிலையைத் தெரிவித்து வருந்தினர். புலிக்குட்டி, பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவர். எனவே, தியாகராசர், புலிக்குட்டியைத் தம்மோடு நேரே அழைத்துச் சென்று, மடத்துத் தலைவரிடமும் மற்றையோரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் செய்து, அவரை மடத்தில் சேர்த்துவிட்டுத் திரும்பினர்.

# 4. இறுதி நிலை

## இல்வாழ்க்கை

"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை,
நோற்பாரின் நோன்மை உடைத்து"

என்னுமாறு தியாகராசருடைய இல்வாழ்வு, பிறர்க்குப் பயன்பட நடத்தும் வாழ்வாக அமைந்தது. அவருடைய மனைவியார் கணவரது வருவாய்க்குத் தக்கவாறு செலவிட்டுச் செட்டாகக் குடித்தனம் நடத்தி வந்தவராவார். செட்டியார் தம் மனைவியாரோடு மிகவும் வேடிக்கையாகப் பேசி மகிழ்ந்து பொழுது போக்குவதுண்டு. அவ்வம்மையார் தற்கொண்டாற் பேணுவதில் மிகவும் அக்கறை உடையவர்.

தியாகராசர் தம் மனைவியாரைப் பரிகசிப்பதிலும், வேண்டுமென்றே அவர் கருத்துக்கு மாறானவைகளைக் கூறி அவர் கோபத்தைக் கிளறிவிடுவதிலும் விருப்பமுடையவர். கடைசியில் அவ்வம்மையார் கருத்தே நிறைவேறும். ஒரு முறை இருவரும் வண்டியில் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது தம்மிடம் படித்து ஓர் உயர்ந்த பதவியில் இருந்த ஒருவரைத் தியாகராசர் வழியிற் கண்டார். அவர் அஞ்சலி செய்து நின்றார். உடனே, தியாகராசர் வண்டியை விட்டுக் கீழே இறங்கி, அவரைத் தம் மனைவியாருக்குக் காட்டி, "இவர் என் மாணவர்; இப்போது பெரிய பதவியில் இருந்தும் என்னை மறவாமல் இருக்கிறார். இவர் என்னை என் உயிருள்ளவரையில் காப்பாற்றும்

ஆற்றல் உடையவர்,'' என்று கூறிவிட்டு, அவரை நோக்கி, ''நான் பதவியிலிருந்து விலகிவிட்ட பிறகு உம்மிடம் வந்தால் காப்பாற்றுவீரா? மாட்டீரா?'' என்று கேட்டார். ''காத்திருக்கிறேன் அத்தகைய வாய்ப்புக்காக,'' என்று அந்த மாணவர் கூறினர். உடனே தியாகராசர் தம் மனைவியைப் பார்த்து, ''உன் கையில் நான் அகப்பட்டுக்கொண்டேன் என்று எண்ணிவிடாதே. இங்ஙனம் நூற்றுக்கணக் கானவர்கள் என்னைக் காக்க இருக்கின்றார்கள்,'' என்று கூறிவிட்டு, வண்டியில் ஏறிக்கொண்டார். அவர் இவ்வண்ணம் தம் இல்வாழ்க்கையை மிகவும் இன்பமாகவே கழித்துவந்தார்.

**வேலையை விட்டு விலகல்**

தியாகராசரின் உடல்நிலை வரவரத் தளர்ந்தது. அதனால் வேலையை விட்டுச் சொந்த ஊர் போய்விட வேண்டும் என்று அவர் துணிந்தார்; தம் வேலையை விட்டு நீங்கினர்; தம் பதவியில், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் படித்துவந்த **உ. வே. சாமி நாதையர்** என்பாரை அழைத்துச் சென்று அமர்த் தினர்.

தியாகராசர் கும்பகோணம் கல்லூரியை விட்டு நீங்கியதைக் குறித்து மாணவர்கள் அனைவரும் பெரிதும் வருந்தினர். தியாகராசர் வேலையை விட்டு நீங்கினர் எனினும், மாணவர்களிடம் எப்படிப் பழகுவது, எங்ஙனம் அவர்களுக்குக் கல்வி கற்பிப்பது என்பவற்றைச் சாமிநாதையருக்கு அடிக்கடி கூறி வந்தார்.

### பிரியா விடை

தியாகராசர் ' பென்ஷன் ' விஷயத்தையும் முடித்துக்கொண்டு, ஊர் போய்விடலாமென்று ஆறு மாதகாலம் காத்திருந்தும், அக்காரியம் முடிவு பெறவில்லை. ஆதலால் அவர் திருவானைக்கா செல்வ தென்று தீர்மானித்தார். எனவே, கும்பகோணம் கல்லூரி ஆசிரியர்கள் அவருக்குப் பிரிவுபசாரம் நடத்திச் சில பரிசுகளும் கொடுத்துப் பெருமைப் படுத்தி அனுப்பினார்கள்.

### மாணவர் உதவி

செட்டியார் நேரே திருவானைக்கா சென்று அங்குள்ள திருவாவடுதுறை மடத்தில் தங்கியிருந் தார். அவர் அம்மடத்தில் உறைகின்றார் என்பதறிந்த அவருடைய மாணவராகிய வக்கீல் ஐயங்கார் ஒருவர், கிலமாகிக் கிடந்த அந்த மடத்தைப் பெரும்பொருள் செலவு செய்து, தம் ஆசிரியருக்காகப் பழுதுபார்த் துக் கொடுத்தார்.

### கோயில் திருப்பணி

தியாகராசர் திருவானைக்காவில் ஓய்வாக இரண் டாண்டு காலம் கழித்த பிறகே, அவருக்குப் பென்ஷன் தரும் விஷயத்தில் ஒரு முடிவு ஏற்பட்டு, இரண்டாண்டுகளுக்குரிய பென்ஷன் தொகையும் ஒரே சமயத்தில் அவருக்கு அளிக்கப்பட்டது. தியாகராசர் அத்தொகை முழுவதையும் பூவாளூர்க் கோயில் திருப்பணிக்குச் செலவிட்டார்.

## நூல்களை வெளியிடல்

திருவானைக்காவில் தியாகராசர் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தம் ஆசிரியராகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடவேண்டும் என்னும் அவாக் கொண்டார்; திருக்குடந்தைப் புராணம் உட்படச் சில நூல்களை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்பு வேலையில் பிள்ளையவர்களின் மற்றொரு மாணவரும் தியாகராசரின் தோழரும், தியாகராசருக்குப் பின் கும்பகோணம் கல்லூரியில் அப்பதவியில் அமர்த்தப்பட்டவருமான சாமிநாதையரும் பங்கெடுத்துக்கொண்டு, பிள்ளையவர்களுடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவருமாறு செய்தார்.

## நல்லவர் நட்பு

செட்டியார் ஓய்வாகத் திருவானைக்காவில் இருக்கிறார் என்பதறிந்த சிலர், அவரிடம் வந்து பாடம் கேட்டுச் செல்லத் தொடங்கினர். பலர் ஐயங்களைப் போக்கிக்கொள்ள அவரை நாடினர். பலர் தமிழ் நூல்களின் அருமை பெருமைகளைப்பற்றி அவருடன் அளவளாவிப் பேசவந்தனர். அவர்களுள் முக்கியமானவர் தமிழர் வரலாற்றை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த ம. வீ. கனகசபைப் பிள்ளை அவர்களாவர். கனகசபைப் பிள்ளையவர்கள் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் படித்தவர். அவர் விரும்பிய பழைய நூல்கள் சிலவற்றைத் தியாகராச செட்டியார் பெற்றுக் கொடுத்ததுடன், தமக்குத் தெரிந்த பழைய செய்திகளையும் அவரிடம் கூறினார்.

இந்நிலையில் தியாகராசரின் உடல் நிலை வரவரக் கெட்டது; கண் பார்வையும் குறைந்தது. இனி வெளியில் இராமல் உறவினர்களுடன் இருக்க வேண்டும் என்று விரும்பிய தியாகராசர், திருவானைக் காவை விட்டுத் திரிசிரபுரம் சென்று, அங்குச் சிறிது காலம் இருந்தார்; பிறகு உறையூருக்கே சென்று, தம் உறவினர்களுடன் உறைந்தார்.

## சென்னையிற் சிறிது காலம்

கண் ஒளி நாளுக்குநாள் குறைந்துகொண்டே வந்தமையால், தியாகராசர் சென்னையில் இருந்த சிறந்த கண் மருத்துவர்களிடம் காட்டி மருத்துவம் செய்துகொள்ளவேண்டும் என்ற தம் மாணவர் சிலருடைய வேண்டுகோளுக்கிணங்கித் தம் குடும்பத்துடன் சென்னை வந்தார். சென்னையில் இருந்த போது, **பூண்டி அரங்கநாத முதலியார்** போன்ற பெரியவர்கள் அவரைச் சந்தித்து, அளவளாவிக் கொண்டிருந்தனர். சென்னையிலும் சில இடங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருப்பதையும், ஆங்குச் சிறிய தமிழ் நூல்கள் பழங்கால முறைப்படி கற்பிக்கப் படுவதையும், தமிழைப் பழைய முறையில் படிக்கும் முறை கைவிடப்படவில்லை என்பதையும் அறிந்து, அவர் அளவற்ற மனமகிழ்ச்சி கொண்டார்.

சென்னையில் திறமை மிக்க கண் மருத்துவர் பலரிடம் காட்டியும், தியாகராசருக்கு வயதாகிவிட்ட படியால், பார்வைக்குறைவை நீக்க முடியாதெனவும், அதற்கு மருத்துவம் எதுவும் இல்லை எனவும் மருத்துவர் கூறிவிட்டனர். அதனால், அவர் தம் குடும்பத்துடன்

திருவாவடுதுறை சென்றார்; அங்குத் தங்கித் தம்பிரான்களுக்குத் தமிழ்ப்பாடம் கற்பித்துவந்தார்.

### செட்டியார் மறைவு

நாளடைவில் தியாகராசரின் உடல் நிலை பெரிதும் தளர்ந்துவிட்டது. வயிற்றுப் போக்கு முதலிய புதிய பிணிகளும் அவரைப் பற்றின. அவர் தம்மிடம் இருந்த பணத்தைக்கொண்டு பூவாளூர்க் கோயிலுக்கு நிலங்கள் வாங்கி அளித்தார்; பின் தேவார திருவாசகங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பதில் மன அமைதியுடன் காலங் கழித்தார். இவ்வண்ணம் தேவாரம் படித்துக்கொண்டிருப்பதைக் கேட்டவண்ணமாகவே, 1888-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ஆம் நாள் தியாகராசர் உயிர் நீத்தார்.

அவருடைய பிரிவைக் கேட்ட தமிழ் மாணவர்களும் பிறரும் பெரிதும் துன்புற்றனர். அவரிடம் படித்துப் பின்னர்ப் பெரிய பதவிகளில் இருந்தவர் அனைவரும் அவர் மறைவைக் கேட்டு வருந்தித் துயருற்றனர்.

### அவரது வாழ்க்கை வரலாறு

அவருடைய அரிய நட்புரிமையைப் பாராட்டி அவருடைய தோழராகிய உத்தமதானபுரம் மஹா மஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், அவர் வரலாற்றை விரிவாக எழுதி வெளியிட்டார்; அத்துடன் தாம் வாழும் இல்லத்திற்கும் அவர் பெய

ரையே இட்டனர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் செட்டியாரைப் பற்றி நூல் எழுதியிரா விடில், அவர் பெருமையைத் தமிழ் மக்கள் நன்கு அறிய இயலாது ; அவர் பெருமையை உலகறியச் செய்த டாக்டர் ஐயர் அவர்கட்கு நமது நன்றி உரியதாகுக.

## 5. குணநலன்கள்

### கல்வியில் ஆர்வம்

தியாகராசர் இளமை முதற்கொண்டே கல்வியில் மிகுந்த ஆர்வம் உடையவர். துவக்கக்கல்வி முடிந்த வுடன் படித்தது போதும் என்று அவர் தந்தையார் தியாகராசரைப் பள்ளியினின்று நிறுத்திவிட்டார்; தம்முடைய உழவு வேலையில் உடனிருந்து வேலை கற்குமாறு பணித்தார். தந்தையின் விருப்பப்படி தியாகராசர் உழவுத்தொழிலில் ஈடுபட்டார்; மடை யடைத்தார்; மடைமாற்றினார்; கரும்பு ஆலைப் பணி யும் கற்றுக்கொண்டார். எனினும் கல்வி பயிலுவதை மறக்கவில்லை; ஓய்வு கிடைத்தபோதெல்லாம் செய்யுட் களை மனப்பாடம் செய்வதை வழக்கமாகக் கொண் டார்; வேளாண் தொழிலில் ஈடுபட்டிருந்த போதும் கையில் ஏட்டுடன் இருந்தார்; அவர் வாய் எப்போதும் ஏதேனும் ஒரு செய்யுளை இசையுடன் பாடிக் கொண்டே இருந்தது.

அவர் தமக்கு வேலையில் ஓய்வு கிடைக்கும் காலங்களில் சுற்றுப்புற ஊர்களுக்குச் சென்று, அங்குள்ள புலவர் பெருமக்களை அணுகித் தமக்கு விருப்பமான நூல்களைப் பாடங்கேட்டார்; தமக்கேற் பட்ட ஐயங்களைப் போக்கிக் கொண்டார். இவ்வாறு அவர் வேலை செய்த காலத்திலேயே பல சிறு தமிழ் நூல்களை மனப் பாடம் செய்துகொண்டார்.

தியாகராசர் மேலும் படிக்க வேண்டும் என்னும் தம் விருப்பத்தைத் தம் தந்தையாரிடம் தெரிவித்தார். அவர், " உள்ள படிப்பே போதும்; மேலும் படித்

துப் பொருள்திரட்ட வேண்டிய தேவையில்லை. உள்ள நிலபுலன்களைக் கவனித்தாலே போதும். திருமணம் செய்துகொண்டு சுகமாக வாழவேண்டிய காலத்தில் படிப்பெதற்கு?'' என்று கூறிவிட்டார்; ''தமிழ்ப் படிப்ப வர்கள் வறுமையில் வாடவேண்டியதாகிறது'' என்று கூறி அச்சமுண்டாக்கினார். இவற்றினாலெல்லாம் தியாகராசர் மனம் மாறுபடவில்லை; பிடிவாதமாக இருந்து தந்தையின் மனத்தை மாற்றினார்; மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணவராகச் சேர்ந்து, பெரும் புலவரானார். இவற்றால் கல்வியில் அவருக்கிருந்த ஆர்வத்தை நன்கறியலாம் அன்றோ?

## ஆசிரியர்பால் அன்பு

தியாகராசர் தம் ஆசிரியராகிய பிள்ளையவர் களிடம் பேரன்பு கொண்டிருந்தார்; பிள்ளையவர்களை நிழல் போலத் தொடர்ந்து பணியாற்றி அவர் மனத்தைக் கவர்ந்தார்; ஊக்கமுள்ள மாணவரா யிருந்து பல நூல்களைக் கற்றார்; பிள்ளையவர்களின் செய்யுட்களில் எவரேனும் அழுக்காறு கொண்டு குறை கூறினால், தியாகராசர் அவர்களைக் கேள்விகள் பல கேட்டுத் திணறச் செய்தார். குறை கூறுபவர்கள் தங்கள் பிழை யுணர்ந்து மன்னிப்புப் பெறும் வரை தியாகராசரின் கேள்வி மாரியினின்றும் தப்பிச்செல்ல முடியாது. தம் ஆசிரியர் எழுதிய செய்யுட்கள் ஒவ்வொன்றையும் தியாகராசர் மனப்பாடம் செய்து, அவருடைய செய்யுள் அமைப்பின் போக்கு, நயம், கற்பனைத்திறன், சொல்லாழம் முதலியவற்றை நன்கு

மனத்தில் வேரூன்றச் செய்திருந்தார். எனவே, பிள்ளையவர்களின் செய்யுட்களை, மற்றவர் இயற்றியவை என்று கூறித் தியாகராசரை ஏமாற்ற முடியாது. அவர் தம் ஆசிரியரின் புகழுக்குச் சிறு களங்கம் ஏற்படவும் விடமாட்டார்; தாம் வயது முதிர்ந்து பெரும் புலவராகப் புகழடைந்த பின்னரும், தம் ஆசிரியரிடத்துப் பெரும் பணிவும் அன்பும் அடக்கமும் கொண்டிருந்தார்; தம் ஆசிரியர் பணத்திற்கு முட்டுப்பட்ட சில சமயங்களில் தமக்குத் தெரிந்த சிலரைக் கொண்டு பணவுதவி கிடைக்குமாறு செய்தார்; தம் ஆசிரியரின் நூல்கள் சிலவற்றை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார்.

## தவற்றைக் கண்டிக்கும் ஆண்மை

தியாகராசர், தவறு காணுமிடத்து அதைக் கண்டிப்பதற்குச் சற்றும் தயங்கியதில்லை. தவருன செய்யுட்களையோ, நூல்களையோ கொண்டுபோய்க் காட்டி அவரிடம் சிறப்புப்பாயிரம் பெறுவது முடியாத செயல். எவர் எதை எழுதிச் சென்ருலும் படித்துப் பாராமல் சிறப்புப்பாயிரம் தருவது அவருக்கு வழக்கமில்லை. தம் ஆசிரியரே தவருக நடந்தார் என்ருலும் தியாகராசர் சற்றும் அஞ்சாமல் கண்டித்தே விடுவார்; யமகம் திரிபுகளை வைத்துப் பிள்ளையவர்கள் பிற்காலத்தில் பாடிய செய்யுட்கள் புலவர்கட்கே எளிதில் விளங்காதவைகளாக இருக்கின்றன என்றும், அவற்றிற்குத் தக்க குறிப்புகளின்றிப் பதிப்பிக்கக்கூடாதென்றும் பிள்ளையவர்களிடம் நேரிலேயே கண்டித்துக் கூறிவிட்டார். பிள்ளையவர்

கள் வருவார் போவாருக் கெல்லாம் சோறளித்துப் பெரும் செலவு செய்து வறுமையில் வாடநேரிடுவதை யும் தியாகராசர் பன்முறை கண்டித்துள்ளார். நல்ல முறையில் செய்யுள் இயற்றத் தெரியாமல் நூல் இயற்றிக்கொண்டு வந்து தொந்தரை கொடுப்பவர் களுக் கெல்லாம் பிள்ளையவர்கள் சிறப்புப்பாயிரம் கொடுத்துவிடும் வழக்கத்தை அவரிடம் மிக வன்மை யாகக் கண்டித்துக் கூறியுள்ளார். ஒரு முறை பள்ளிக் கூடத்தை மேற்பார்வையிட வந்த அதிகாரி, தியாக ராசர் தேவை யில்லாதவற்றை யெல்லாம் மாண வர்க்குக் கற்பித்திருப்பதாகக் குறை கூறினர். தியாக ராசர் சற்றும் அஞ்சாமல், மாணவர்கள் படிக்க வேண்டியவைகளைப் படித்துவிட்டு மேலும் கற்றுக் கொள்வது குற்றம் என்பது நகைப்பிற்கிடமானது என்று அவ்வதிகாரியைக் கடிந்து கூறி யனுப்பினர்.

**சிக்கன வாழ்க்கை**

தியாகராசர் தம் குடும்ப வாழ்க்கையைச் செட் டாக நடத்தினர்; என்றும் பணமுடை ஏற்படா வண்ணம் தம் குடும்பத்தை நடத்தினர். தமக்குக் கிடைத்த ஊதியத்தில் ஒரு பங்கைக் குடும்பச் செலவிற் கென ஒதுக்கிவிட்டு ஒரு பகுதியைச் சேமித்து வைத்தார். இதனல் பிறரிடம் கடன் வாங்கவோ, பணத்திற்கெனப் பிறர் கண்ணோட்டத்திற்குக் காத் துக் கிடக்கவோ, பிறர் விருப்பப்படியெல்லாம் இணங்கி நடக்கவோ, தியாகராசருக்கு அவசியமில்லாமற் போயிற்று.

## சிறந்த சிவபக்தர்


தியாகராசர் சிவநெறிச் செல்வர் ; நாள்தோறும் நீராடி முடிந்ததும் சிவபூசை செய்யத் தவறுவதில்லை. தேவார - திருவாசகங்கள் படிப்பதில் அவருக்கு இருந்த விருப்பம் அளவிடற்கரியது. ஓய்வு நேரங் களில் அவர் மனம் தேவார திருவாசகங்களில் பதிந்து விடும் ; தம் இறப்புக்காலத்திலும் அவர் தேவாரத் தைப் படிக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டே உயிர் நீத்தார். தியாகராசர் சைவப்பற்று மிகுந்தவராதலின், தாம் சேமித்து வைத்திருந்த சொத்துக்கள் அனைத் தையும் தாம் பிறந்த ஊராகிய பூவாளூர்ச் சிவன் கோயில் பூசைக்கு உதவுமாறு அளித்துவிட்டார்.

## தமிழ்ப்பற்று

தியாகராசர் மிகுந்த தமிழ்ப்பற்றுடையவர் ; எவர் தம்மைத் தேடி வரினும் தமிழின் பெருமையை எடுத்து விளக்கித் தமிழைப் படிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினர்; தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் பழக வேண்டுமென்றும், செய்யுளைத் தவ றின்றி எழுதப்பழக வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினர். தம்மிடம் பயிலும் மாணவர்கள் இலக்கண இலக்கியங்களில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக விளங்க வேண்டும் என்பதில் தியாகராசர் பெரு விருப் பங் கொண்டவர் ; திருவரங்கத்தில் சிறிய பள்ளிக் கூடத்தில் தியாகராசர் ஆசிரியரா யிருந்தபோது, அங்குப் படித்தவர்களையும் தமிழில் தக்க பயிற்சி உடையவர்களாக ஆக்கினர். அவரிடம் கல்வி

பயின்றவர்கள் அனைவரும் நல்ல தமிழ்ப் பயிற்சி உடையவர்களாகவே விளங்கினார்கள். தமிழின் தூய்மை கெடாது காக்கப்படுதல் வேண்டும் என்பது தியாகராசரின் பேரவாவாக இருந்தது. அவர் தம் இறுதிக்காலம் வரை, தம் கண்ணொளி மங்கிய பிறகும், தமிழில் பாடம் சொல்லிக்கொண்டிருந்ததை நிறுத்தவேயில்லை. அவருடைய தமிழ்த் தொண்டு இறுதி வரை நடந்துகொண்டே யிருந்தது; அஃதொன்றே, தமிழில் அவருக்கிருந்த பேரார்வத்தை விளக்கப் போதிய சான்றாகும்.

தியாகராசர் திருப்பெயர் வாழ்க!



# TAMIL PULAVAR PERUMAKKAL

## III

BY

Pulavar P. SELVARAJ
*C. A. H. H. M. High School, Madras*

---

VINDHYA PUBLICATIONS

**VEPERY : : MADRAS**

1950 [*As.* 12